சிவமயம்



# நாதரூபம்



எமது தாயார்

திருமதி. நாதரூபி இரகுநாதக்குருக்கள்

நினைவு நாள் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம். 07.07.1949 மறைவு. 19.01.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# நாதரூபம்

புங்குடுதீவு

## அமரர், ஸ்ரீமதி
## நாதரூபி அம்மா இரகுநாதக் குருக்கள்

அவர்களின்

ஞாபகார்த்த வெளியீடு

**28:01:2015. புதன்கிழமை.**

**தசாக தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : நாதரூபம்

பிரார்த்தனை
(காரிய சித்திமாலை, ஸ்கந்தஷஷ்டிகவசம்)
தீப பூஜா
(திருவிளக்குப் பூஜை)
வேத விழுமியங்கள்
(நால்வேதமங்கள் கூறும் தர்மநெறிகள்)

மொழி: தமிழ்

தொகுப்பும்
கணனிவடிவமைப்பும்: ப. சிவானந்த சர்மா B.A.(Hon)
(கோப்பாய் சிவம்)
ஸ்ரீநகரம், அளவோடை வீதி,
இணுவில், சுன்னாகம். ☎ 021 224 1504

வீ.வீ. முத்துசாமி தொகுத்து தமிழ்நாடு, மதுரை, வேதமன்ற வெளியீடாக 2003ஆம் ஆண்டில் வெளியான வேத தர்மம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. சுடர்மணிப் பதிப்பகம், மற்றும் ஆசிரியர் ஆகியோருக்கு நமது நன்றி கலந்த வணக்கங்கள்.

அச்சுப்பதிப்பு: கஜானந்த் பிறின்டேர்ஸ், மானிப்பாய் வீதி,
இணுவில்.

வெளியீடு:
அமரர் ஸ்ரீமதி நாதரூபி அம்மா இரகுநாதக் குருக்கள் அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமைத் தோற்றம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பீமரதசாந்தியின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்கொழும்பு விஜயரத்தினம்

மகாவித்தியாலயத்தின் நூறாவது ஆண்டு

விழாவின்போது இப்பாடசாலையின் முதல் மாணவியாகிய

ஸ்ரீமதி நாதரூபி அம்மாவை

அழைத்துக் கௌரவித்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

அன்பாலும் பண்பாலும்

எம்மை நன்கு வளர்த்தெடுத்து

இப்புவியில் மிளிரச்செய்த

எமது அன்புத் தெய்வம்

அமரர், ஸ்ரீமதி

நாதரூபி அம்மா இரகுநாதக் குருக்கள்

அவர்களின்


பாதாரவிந்தங்களில்

இம்மலரினைச்

சமர்ப்பணம் செய்கின்றோம்



குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமதி நாதரூபி அம்மா இரகுநாதக் குருக்கள்

## வாழ்க்கை வரலாறு

ஸ்ரீமதி நாதரூபி அம்மா இரகுநாதக் குருக்கள் இந்து சமுத்திரத்தில் முத்தாக விளங்கும் இவ் இலங்கைத் தீவின் வடபால் சப்த தீவுகளின் ஒன்றான நயினாதீவு புகழ் பூத்த சிவாச்சாரிய பிரதிஷ்டா பூஷணம் அமரர் ஐ. கைலாசநாதக் குருக்கள் ராஜாம்பாள் தம்பதிகளுக்கு நான்காவது மகளாக 07-07-1949ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு வாகீஸ்வராம்மா, அமரர் நாகரத்தினம், கலாவதி அம்மா, அமரர் ராஜேஸ்வரக் குருக்கள், வாமதேவக்குருக்கள் ஆகியோர் சகோதரர்கள் ஆவார்.

நீர்கொழும்பு புலம்பெயர்ந்து தனது ஆரம்ப கல்வியை விவேகானந்த பாடசாலையில் (தற்போது விஜயரட்னம் மகாவித்தியாலயம்) முதலாவது மாணவியாகச் சேர்ந்து தனது ஆரம்பக்கல்வியைப் பயின்றார். (இப்பாடசாலையில் நூறாவது ஆண்டுவிழாவின்போது இவரை அழைத்து முதலாவது மாணவி என்றவகையில் கௌரவம் வழங்கினார்கள்.)

பின்னர் பருவகாலத்தில் நயினாதீவிலும் தனது இளமைக் காலத்தில் புங்குடுதீவு பெருங்காட்டிலும் வாழ்ந்து வந்தார். 1965ஆம் ஆண்டு புங்குடுதீவு இறுப்பிட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு சமஸ்கிருத பண்டிதர் சைவசித்தாந்த பண்டிதர் ஸ்ரீநிவாசக்குருக்கள் சாரதம்மா தம்பதிகளின் மூத்த புதல்வன் சோதிடநிபுணர், ஆலய கட்டிட சிற்பசாஸ்திரம், குண்டமண்டலவேதிகா ஸ்தாபன வல்லுநர் சிவஸ்ரீ இரகுநாதக்குருக்களை மணம் புரிந்து இறுப்பிட்டி பெரியபுலத்தில் தனது உறவுகளுடன் வாழ்ந்தார். தனது அன்பான புன்சிரிப்பாலும் சிறந்த நன்னடத்தையாலும் தனது மைத்துனர்கள் மைத்துனிமார்கள் மதிப்பையும் மரியாதையையும் பெற்றிருந்தார். ஸ்ரீமதி பரமேஸ்வரி அம்மா, அமரர் நாகேந்திரக்குருக்கள் (சின்னமணி ஐயா), சண்முகநாதக்குருக்கள் (கனடா), திருஞானசம்பந்த சர்மா, கிருஷ்ணலீலா, சர்வானந்தக்குருக்கள் (கனடா), மீனலோசினி, குகனேஸ்வரகுருக்கள் (கனடா), ஆனந்தசர்மா (கனடா) ஆகியவர்கள் இவரது மைத்துனர் மைத்துனி ஆவார்கள்.

புங்குடுதீவு அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தை 1967ம் ஆண்டு இரகுநாதக்குருக்கள் தலைமையில் பொறுப்பு எடுத்து இறுப்பிட்டி ஆறாம் வட்டாராம் கிராம மக்களின் ஆதரவோடு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஆக இவ்வாலயம் உள்ளவரை வளர்ச்சிபெற இருவரும் தன்னலமற்ற சேவையாற்றினர். தான் என்ன சமைத்தாலும் அதனைப் பிள்ளையாருக்கே முதல் சமரப்பிக்கும் பழக்கத்தை இறுதிவரை கொண்டிருந்தார். ஆறாம் வட்டாரத்தில் உள்ள தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலவர்களின் குழந்தைகளை தன் குழந்தையாக வளர்த்த பாங்கினை அவரின் இறுதி யாத்திரையின்போது காணக்கூடியதாக இருந்தது.

அரியநாயகன் பிள்ளையாருக்கு இவர் செய்த சேவை அளப்பெரியது. தனது கைகளினால் சமைத்த மோதகமே பிள்ளையாருக்கு விருப்பம் ஆகும். அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகதி விநாயகரைத் தொடர்ந்து பட்டையகாரன் வளவு அம்மன் கோவில், கல்லடி அம்மன் ஆலயம் என்பனவும் இரகுநாதகுருக்களின் பொறுப்பில் இருந்தன.

1967ம் ஆண்டு மூத்த மகன் சிவஸ்ரீ கமலநாதக்குருக்களை ( லண்டன் என்.'.பீல்ட் நாகபூஷனி அம்பாள் ஆலய பிரதமகுரு) பெற்று வளர்த்து கல்வி அறிவு ஊட்டி 1994ம் ஆண்டு இணுவில் கந்தசுவாமி கோவில் உருத்திரமூர்த்திக் குருக்கள் ஸ்ரீரஞ்சனி தம்பதிகளின் ஏக புதல்வி அபர்ணாதேவியை மணம்முடித்து கொடுத்து சனாதனி, ஸ்ரீநிகேஷசர்மா, சாத்விகா ஆகிய மூவரைப் பேரப்பிள்ளைகளாகக் கண்டு மகிழ்ந்தார்.

1970ம் ஆண்டு சிவஸ்ரீ கமலதாசக்குருக்களை (பாதன் ஐயா) பெற்று கல்வி அறிவு ஊட்டி, ஒட்டிசுட்டான் சிவஸ்ரீ ராஜாராம் குருக்கள் தேவமனோஹரி தம்பதிகளின் இரண்டாவது புதல்வி தேவஜெகர்னீ மணம் முடித்து வைத்து வித்யாசாகரசர்மா, விபூஷணசர்மா, விகர்சனசர்மா ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாக கண்டு மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மூன்றாவது பிள்ளையான கமலாசினியை பண்புமிகு மகளாக கல்வி அறிவு ஊட்டி 1991ம் ஆண்டு கனடாவுக்கு அனுப்பி நாவற்குழி நிர்த்தனராஜக்குருக்கள் பரமேஸ்வரி அம்மா தம்பதிகளின் மூத்த புதல்வன் சிவஸ்ரீ மயூரக்குருக்களைத் திருமணம் செய்வித்து யோகிஸ்சர்மா, பிரகாஷ்சர்மா, சிவநேசசர்மா ஆகியோரை தௌகித்தி ரர்களாகக் கண்டு மகிழ்ந்தார்.

தனது நாலாவது பிள்ளையான கைலாசவதனியை 1979ம் ஆண்டு பெற்று பண்புமிக்கு மகளாக கல்வி அறிவு ஊட்டி கல்வியங்காடு வீரபத்திரர் ஆலய சிவஸ்ரீ வரதராஜக்குருக்கள் விக்னேஸ்வரி தம்பதிகளின் மூன்றாவது மகனான சிவஸ்ரீ திவாகரேஸ்வரக் குருக்களுக்கு மணம் முடித்துக் கொடுத்து திவர்ஷனசர்மா, திவர்த்திகசர்மா, கைலாச சர்மா ஆகியோரைப் பேரப் பிள்ளைகளாகக் கண்டு மகிழ்ந்தார்.

ஐந்தாவது பிள்ளையான சிவஸ்ரீ கமலேஸ்வரக்குருக்களை (சிவன் கோவில் பிரதமகுரு, வவுனியா) 1984ம் ஆண்டு பெற்றெடுத்து சீராக வளர்த்து கல்வி அறிவு ஊட்டி தனது தம்பியான அமரர் சிவஸ்ரீ கைலை ராஜேஸ்வரக்குருக்கள் மஞ்சுளா தம்பதிகளின் இரண்டாவது மகளான லயவர்ச்சிதாவை மணம் செய்து கொடுத்து பிரஹிதசர்மா, பிரவரத்தி ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகக் கண்டு மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிக் குழந்தையாக காயத்திரியை 1988ம் ஆண்டு பெற்று சீராக வளர்த்து வல்வெட்டித்துறை சிவனாலய சிவஸ்ரீ பரமேஸ்வர மனோஹரக்குருக்கள் கௌரிபாலா தம்பதிகளின் இரண்டாவது மகன் சிவஸ்ரீ பராபரக்குருக்கள் (லண்டன் ஹறோ சித்திவிநாயகர் பிரதமகுரு) மணம் முடித்து கொடுத்து மகிழ்ந்தார்.

இடப்பெயர்வினால் 1991ம் ஆண்டு யாழ்ப்பானத்தில், 1995 தொடக்கம் 1996 வரை வட்டகச்சி சோதி விநாயகர் ஆலயத்திலே, 1996 முதல் இன்றுவரை வவுனியா கோயில்குளம் சிவன் ஆலயத்திலும் வாழ்ந்துவந்தார். கணவராகிய சிவஸ்ரீ இரகுநாதகுருக்கள் வவுனியா கோவில்குளம் சிவனாலய பிரதமகுரு, போஷகர், சிவாகம ஆலோசகராக இன்றுவரை உயரிய பதவி வகிக்கின்றார்.

அமரராகிவிட்ட நாதரூபி அம்மாவும் சிவஸ்ரீ இரகுநாதகுருக்களும் தங்களது இல்லறவாழ்வில் 50 ஆண்டுகாலம் வாழ்ந்தார்கள். எங்கள் அம்மா இன்றுவரை பல குழந்தைப்பேறுகளுக்குச் செவிலித்தாயாக உதவி புரிந்தார்.

பிள்ளையார், முருகன், நகாபூஷனி அம்மன் மீது அளப்பரிய பற்றுக் கொண்டவர். எந்நேரமும் விநாயகர் காரியசித்திமாலை, கந்தசஷ்டி கவசமும் பாராயணம் செய்யும் மரபாய்க்கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010ம் ஆண்டு சுகவீனம் உற்று கொழும்பு வைத்தியசாலையில் வைத்தியம் பெற்று, 2010ம் ஆண்டு டிசம்பர் மாதம் மூத்த மகனின் அழைப்பைப் பெற்று லண்டனுக்குச் சென்றார். பின்னர் தாயக பற்று காரணமாக 6 மாதங்களுக்கு ஒரு தடவையாவது தாயகம் வந்து செல்வார். 2013ம் ஆண்டு மூத்த பேரனான ஸ்ரீநிகேஷனின் பூணூலுக்கு (லண்டன்) பிறகு தனது மகளான கமலாசனியின் வேண்டுதலால் கனடா சென்று 6 மாதகாலம் தனது உறவுகளோடும் ஊராரோடும் அளவளாவி இருந்தார்.

2014ம் ஆண்டு தை தொடக்கம் தங்களது இருவரின் விருப்பத்தால் அக்டோபர் வரை புங்குடுதீவிலேயே சந்தோஷமாக வாழ்ந்து வந்தார். அக்டோபர் மாதம் மருத்துவ பரிசோதனைக்காக மீண்டும் லண்டன் வந்து ஒருமாத காலத்தில் தங்கள் தாயகம் திரும்பினார். ஜனவரி மாதம் சிறுநீரக கோளாறு காரணமாக நோயுற்று சிகிச்சை பெற்று 2015ம் ஆண்டு புங்குடுதீவு அரியநாயகப்புலம் ஸ்ரீ வீரகத்திவிநாயகர் மஹோற்ஸவத்தை தனது மூத்தமகன் கொடியேற்ற இருப்பதை தனது பிள்ளைகளோடு தரிசிக்க ஆவலாக இருந்தார் ஆனால் திடீர்என்று 19-01-2015 திங்கட்கிழமை மதியம் தனது கணவர், மூத்த மகன், கடைசி மகன் முன்னிலையில் தீர்க்கசுமங்கலியாக இறைபதம் அடைந்தார்.

சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது இல்லத்தரசி ஸ்ரீமதி நாதரூபி அம்மா இரகுநாதகக் குருக்களின் இறுதி யாத்திரைக்கு உதவி புரிந்த அனைவருக்கும் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளோம். உடல்நலம் குன்றியபோது இறுதிக்காலத்தில் உதவிபுரிந்த வவுனியா பொது வைத்தியசாலை மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் நாயகம் Dr. அகிலேந்திரன் அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம். முன்னதாக லண்டனில் மருத்துவ உதவி செய்த எமது இல்ல மருத்துவர் (G.P.) Dr. சிவானந்தன் குடும்பத்தினருக்கும் கனடாவில் மருத்துவ உதவி புரிந்த Dr. துஷ்யந்திக்கும் நன்றிகள். உடனடியாக உதவிபுரிந்த வவுனியா கோவில்குளம் அகிலாண் டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் தர்மகர்த்தாக்கள், தொண்டர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கிறோம். உடனடியாக எமது துன்பத்தில் பங்குகொண்ட உறவுகள், ஊர்மக்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட புங்குடுதீவு அரிய நாயகம்புலம் வீரகத்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையினருக்கும், இறுப்பிட்டி ஐங்கரன் நிலையத்துக்கும், பெரியபுலம் வீரகத்திவிநாயகர் ஆலயத்துக்கும், நாச்சிமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலுக்கும், வவுனியா சிவன்கோவில் சபையினர், அருளகம், அகிலாண்டேஸ்வரி இல்லம், சிவன் முதியோர் இல்லம், ஆனந்த இல்லம், வவுனியா குடியிருப்பு கந்தசுவாமிக்குருக்கள், புங்குடுதீவு சங்கரதாசக்குருக்கள் அவர்கள் பிள்ளைகளுக்கும், வவுனியா சிவனாலய அந்தணர்களுக்கும், வவுனியா அந்தணர் குருமார் ஒன்றியம், சர்வதேச இந்து குருமார் ஒன்றியம், மொடேர்ன் இந்து ஆகம கலாச்சார நிறுவனம், தவசிக்குளம் பாலவிநாயகர் ஆலயத் தொண்டர்கள், ஸ்வாமி அம்மா, இந்து அன்பகம், கனடா இந்து குருமார் ஒன்றியம், லண்டன் என்பில்ட் நாகபூஷணி அம்பாள் ஆலய சிவாச்சாரியார்கள் அடியவர்கள் மற்றும் இந்து தமிழ் கலாச்சார சங்கம், பத்திரிகையாளருக்கும், லண்டன் GTV நிறுவனம், **Lankasri** இணையதளம், மலர் வெளியிட உதவி புரிந்த கோப்பாய் சிவம் அண்ணா, புத்தக முன்பக்கம் பின்பக்கம் வடிவமைப்புச் செய்த கபிலன்சர்மா, உணவு சிற்றுண்டி வழங்கிய உறவுகளுக்கும் மற்றும் எமக்கு சகலவித்திலும் உதவிய உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

- குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

## காரிய சித்தி மாலை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங் கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.
உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளி யாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலாம் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

செய்யும் வினையின் முதல் யாவன்
செய்யப் படும்அப் பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேதமுடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன் வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன்அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்?
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன் யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# கந்தர் ஷஷ்டி கவசம்

## காப்பு

*நேரிசை வெண்பா*

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன்அருள்
கந்தசஷ்டி கவசந் தனை.

**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி.

*நிலைமண்டில ஆசிரியப்பா*

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா! நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் செளவும்
உய்யொளி செளவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் செளவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஎனது உள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்துஅமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள்ள எந்தன் உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

*கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தீப பூஜா

## (திருவிளக்குப் பூஜை)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்குப் பூஜை

## விபூதி தரித்தல்

அனைவரும் வபூதி அணிந்துகொள்ளவும்.

ஸ்ரீகரம் ச பவித்ரம் ச
ரோக தோஷ நிவாரணம்
லோகைக வசீகரம் புண்யம்
பஸ்மம் த்ரைலோக்ய சாதனம்

## பவித்திரம் (தர்ப்பை) அணிதல்

தர்ப்பையை ஆசனமாகக் கால்களின்கீழ் இட்டு தர்பையாலான பவித்திரத்தை மோதிர விரலில் அணிந்து கொண்டு

ததேவலக்னம் சுதினம் ததைவ
தாராபலம் சந்த்ர பலம் ததைவ
வித்யாபலம் தைவபலம் ததைவ
லக்ஷமீபதே தேங்க்ரியுகம் ஸ்மராமி

நெற்றியிலே குட்டிக்கொண்டு விநாயகரை வணங்கவும்.

ஓம் கம் கணபதயே நம:

சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தயே

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேறுவாம்.

அக்ஷதையும் பூவும் கையில் எடுத்து சங்கல்பம் செய்துகொள்க.

மமோபாத்த சமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் அஸயாம் வர்த்தமானாயாம் சுபதிதௌ ........ நாம சம்வத்சரே ............. அயனே ........... மாசே .......... வாசரயுக்தாயாம் ..........நக்ஷத்ரயுக்தாயாம் புண்ய சுபதிதௌ அஸ்மாகம் சஹ குடும்பானாம் க்ஷேம ஸ்தைர்ய வீர்ய விஜய ஆயுராரோக்ய அஷ்ட ஐஸ்வர்யாணாம் அபிவிருத்யர்த்தம் தர்மார்த்த காம்ய மோக்ஷ சதுர்வித பல புருஷார்த்த சித்யர்த்தம் ஆயுஷ்மத் சத் சந்தான சம்ருத்யர்த்தம் லக்ஷ்மீகடாக்ஷ சித்யர்த்தம் தீப பூஜாம் அஹம் அத்ய கரிஷ்யே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(லக்ஷ்மீகடாக்ஷம் கிட்டி எல்லாச் செல்வங்களையும் பெற்று மங்கல வாழ்வு வாழ்வதற்காகத் திருவிளக்குப் பூஜையைச் செய்கிறேன் என்று தீர்மானம் பண்ணிக்கொள்க.)

அட்சதை பூ என்பவற்றை வடக்கே போட்டு நீரினால் கையைத் துடைத்துக் கொள்க.

தீபத்தில் திரியை இட்டு நெய்விட்டு விளக்கினை ஏற்றவும். கிழக்கிலே ஆரம்பித்து வலமாக ஐந்து திரிகளையும் ஏற்றவேண்டும்.

தீபம் ஏற்றும்போது பிரார்த்தனை மந்த்ரம்.

தீபதேவீ மஹாதேவீ
சுபம் பவது மே சதா
யாவத் பூஜா ஸமாப்தி ஸ்யாத்
தாவத் ப்ரஜ்வல சுஸ்திரா

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது.
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

அதன்பின் பூக்களை எடுத்துக் கைகளில் ஏந்தியவாறு பிரார்த்தனை செய்தல்வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபம் பவது கல்யாணம்
ஆரோக்யம் தன சம்பதாம்
சர்வசத்ரு விநாசாய
தீப ஜ்யோதி நமோஸ்து தே.

ஸர்வ ஸ்வரூபி ஸர்வேசீ
ஸர்வ சக்தி ஸமன்விதே
ஐஸ்வர்யம் ஆயுராரோக்யம்
மங்களம் தேஹி மே சுபே

என்று பிரார்த்தனை செய்து பூக்களை விளக்கின் பாதங்களில் சமர்ப்பித்தபின் மீண்டும் பூக்களைக் கைகளில் எடுத்து நமஸ்கரித்தவாறு தியானம் செய்யவேண்டும்.

## தியானம்

பத்மாசனாம் பத்மகராம் பத்ம மாலா விபூஷிதாம்
க்ஷீரசாகர சம்பூதாம் ஹேமவர்ண சமப்ரபாம்
ஹேமவர்ண சமம் வஸ்த்ரம் ததானாம் ஹரிவல்லபாம்
பாவயே பக்தி யோகேன சுபே தீபே மனோஹரே

இப்பூக்களையும் பாதத்தில் சமர்ப்பித்தபின் பின்வருமாறு ஒவ்வொரு உபசாரங்களையும் கொடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆசனம்*

கையில் ஒரு கட்டைத் தர்ப்பையை வைத்துக்கொண்டு,

*ஓம் தீபதேவ்யை நம: ஆசனம் சமர்ப்பயாமி*

என்று அந்தத் தர்ப்பையை விளக்கின் பாதத்தருகில் ஆசனமாகப் பாவித்துப் போடவேண்டும்.

*பாத்யம்*

*ஓம் தீபதேவ்யை நம: பாத்யம் சமர்ப்பயாமி*

தீபதேவியின் பாதங்களைக் கழுவுவதற்காகச் சிறிது நீரைத் துளியாகத் தீபத்தின் பாதத்தில் விடவேண்டும்.

*அர்க்யம்*

*ஓம் தீபதேவ்யை நம: அர்க்யம் சமர்ப்பயாமி*

சிரசிலே அர்க்கியம் கொடுக்கும் பாவனையில் மீண்டும் சிறிது நீரைப் பாதத்தில் விடவேண்டும்.

*ஆசமனீயம்*

*ஓம் தீபதேவ்யை நம: ஆசமனீயம் சமர்ப்பயாமி*

பருகுதற்கு நீர் வழங்கும் பாவனையில் மீண்டும் சிறிது நீரைப் பாதத்தில் விடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஸ்நானம்*

*ஓம் தீபதேவ்யை நம: ஸ்நாபயாமி*

நீராடச்செய்யும் பாவனையில் மீண்டும் சிறிது நீரைப் பாதத்தில் விடவேண்டும்.

*ஸ்நானந்தரம் ஆசமனீயம்*

*ஓம் தீபதேவ்யை நம: ஸ்நானானந்தரம் ஆசமனீயம் சமர்ப்பயாமி*

மீண்டும் சிறிது நீரைப் ஆசமனீயத்திற்காகப் பாதத்தில் விடவேண்டும்.

*வஸ்த்ரம்*

*ஓம் தீபதேவ்யை நம: வஸ்த்ரம் சமர்ப்பயாமி*

கைவசம் தயாராக வைத்திருக்கும் சிறு பட்டுத்துணியை தேவிக்கு ஆடை அணிவிக்கும் பாவனையில் விளக்கின் தண்டிலே கட்ட வேண்டும்.

*கந்தம்*

*ஓம் தீபதேவ்யை நம: கந்தான் தாரயாமி*

விளக்கின் உச்சியிலும் பாதத்திலும் சந்தனத் திலகம் இடவேண்டும்.

*குங்குமம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் தீபதேவ்யை நம: குங்குமம் சமர்ப்பயாமி

சந்தனத் திலகத்தின்மேல் குங்குமம் இடவேண்டும்.

அக்ஷதை

ஓம் தீபதேவ்யை நம: அக்ஷதான் சமர்ப்பயாமி

பாதத்தில் சிறிதளவு அட்சதையைத் தூவவேண்டும்.

புஷ்பமாலா

ஓம் தீபதேவ்யை நம: புஷ்பமாலாம் சமர்ப்பயாமி

விளக்கின் தண்டில் பூச்சரத்தை அணிவிக்கவேண்டும்.

புஷ்பை: பூஜயாமி

பூக்களால் அர்ச்சிக்க வேண்டும். ஒவ்வொரு நாமமும் சொல்லி நமஹ எனும்போது ஒவ்வொரு பூவாகப் பாதத்தில் இடவேண்டும்.

ஓம் தீபலக்ஷ்ம்யை நம:
ஓம் மஹாலக்ஷ்ம்யை நம:
ஓம் இந்திராயை நம:
ஓம் சண்டிகாயை நம:
ஓம் க்ஷீராப்தி தனயாயை நம:
ஓம் பீதாம்பரதாரிண்யை நம:
ஓம் சாகரசம்பவாயை நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நாராயணப்ரியாயை நம:
ஓம் ஜகத்குக்ஷ்யை நம:
ஓம் விஸ்ஜனன்யை நம:
ஓம் ஸுஸ்தன்யை நம:
ஓம் கம்புகண்ட்யை நம:
ஓம் சுந்தர்யை நம:
ஓம் பத்மஹஸ்தாயை நம:
ஓம் பஹுப்ரதாயை நம:
ஓம் சந்த்ரவதனாயை நம:
ஓம் சஞ்சலாயை நம:
ஓம் பிம்போஷ்ட்யை நம:
ஓம் அநகாயை நம:
ஓம் சுகபோலாயை நம:
ஓம் பலப்ரதாயை நம:
ஓம் நீடாலகாயை நம:
ஓம் ஸிந்தூர ஸீமந்த சரண்யை நம:
ஓம் சர்வமங்களாயை நம:

இதன்பின் தூபம், தீபம், கற்பூரத்தட்டு, பஞ்சாலாத்தி முதலியவல்றை வரிசையாகக் காட்டவேண்டும்.

## நமஸ்காரம்

பின்வரும் ஒவ்வொரு சுலோக முடிவிலும் ஒவ்வொரு நமஸ்காரமாக 16 முறை திருவிளக்கின் அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாங்க நமஸ்காரம் செய்து வீழ்ந்து வணங்கவேண்டும். (முதலிலே வரிசையில் அமரும்போதே வீழ்ந்து வணங்குவதற்கேற்ற முறையில் இடம் தயார்செய்து கொள்ளவேண்டும்.)

**நமோ தேவ்யை மஹாதேவ்யை சிவாயை சததம் நமஹ**
**நம ப்ரகிருத்யை பத்ராயை நியதா ப்ரணதா ஸ்ம தாம்.**

**யா தேவீ ஸர்வ பூதேஷு விஷ்ணு மாயேதி சப்திதா**
**நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.**

**யா தேவீ ஸர்வ பூதேஷு சேதனேத்யபிதீயதே**
**நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.**

**யா தேவீ ஸர்வ பூதேஷு புத்தி ரூபேண ஸம்ஸ்திதா**
**நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.**

**யா தேவீ ஸர்வ பூதேஷு நித்ரா ரூபேண ஸம்ஸ்திதா**
**நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.**

**யா தேவீ ஸர்வ பூதேஷு ஹ்ீதா ரூபேண ஸம்ஸ்திதா**
**நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.**

**யா தேவீ ஸர்வ பூதேஷு சாயா ரூபேண ஸம்ஸ்திதா**
**நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா தேவீ ஸர்வ பூதேஷு சக்தி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

யா தேவீ ஸர்வ பூதேஷு த்ருஷ்ணா ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

யா தேவீ ஸர்வ பூதேஷு ஹ்ராந்தி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

யா தேவீ ஸர்வ பூதேஷு ஜாதி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

யா தேவீ ஸர்வ பூதேஷு லஜ்ஜா ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

யா தேவீ ஸர்வ பூதேஷு சாந்தி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ

யா தேவீ ஸர்வ பூதேஷு ஸ்ரத்தா ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

யா தேவீ ஸர்வ பூதேஷு காந்தி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

யா தேவீ ஸர்வ பூதேஷு லஹ்மீ ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின் அனைவரும் எழுந்துநின்று கைகளில் பூக்களை எடுத்துவைத்துக்கொண்டு பிரார்த்தனை செய்யவேண்டும். முடிவில் விளக்கின் பாதங்களில் பூக்களைச் சொரிந்துவிடலாம்.

பிறகு குத்துவிளக்குகளை எடுத்துக்கொண்டு அனைவரும் வரிசையாக ஆலயத்தை வீதிவலம் வந்து ஒருபுறத்தில் விளக்கை வைத்துவிட்டு பவித்திரத்தைக் கழற்றி தக்ஷிணை தாமபூலம் குருவுக்குவழங்கி விபூதி பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு விளக்கை எடுத்துக்கொண்டு இல்லத்துக்குச் செல்லலாம். இல்லம் திரும்பியதும் சுவாமியறையில் விளக்கை வைத்து சிறிதுநேரம் அதை எரியவிடுவது நன்று. அதன்பின் சுடர்மீது சிறிது அட்சதை இட்டு அல்லது ஒரு நாணயத்தை வைத்துத் திரியை மெதுவாக உள்ளே இழுத்து அணைத்து விடலாம். வாயால் ஊதி அணைக்கக்கூடாது. ஊடுபற்றி எரியவிடவும் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த்ரன் அருளிய

# ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டகம்

நமஸ்தே(அ)ஸ்து மஹாமாயே ஸ்ரீபீடே ஸுரபூஜிதே ;
ச'ங்கசக்ர கதாஹஸ்தேமஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே ||

நமஸ்தே கருடாரூடே கோலாஸுர பயங்கரி |
ஸர்வபாபஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே ||

ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே ஸர்வ துஷ்ட பயங்கரி |
ஸர்வதுக்கஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே ||

ஸித்தி புத்தி ப்ரதே தேவி புக்தி முக்தி ப்ரதாயினி |
மந்த்ர மூர்த்தே ஸதா தேவி மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே ||

ஆத்யந்தரஹிதே தேவி ஆதிச'க்தி மஹேச்'வரி |
யோகஜ்ஞே யோகஸம்பூதே மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே ||

ஸ்த்தூல ஸூக்ஷ்ம மஹாரௌத்ரே மஹாச'க்தி மஹோதரே |
மஹாபாபஹரே தேவி! மஹாலக்ஷ்மி! நமோ(அ)ஸ்துதே ||

பத்மாஸன ஸ்த்திதேதேவி! பரப்ரஹ்ம ஸ்வரூபிணி |
பரமேசி'ஜகன்மாத: மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே ||

ச்'வேதாம் பரதரே தேவி நானாலங்காரபூஷிதே |
ஜகத்ஸ்த்திதே ஜகன்மாத: மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே ||

மஹாலக்ஷ்ம் யஷ்டகம்ஸ்தோத்ரம் ய: படேத் பக்திமான்நர: |
ஸர்வஸித்தி மவாப்னோதி ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா ||

ஏககாலே படேந்நித்யம் மஹாபாப வினாச'நம் |
த்விகாலே ய: படேந் நித்யம் தனதான்ய ஸமன்வித: ||

த்ரிகாலம் ய: படேத் நித்யம் மஹாச'த்ரு விநாச'னம் |
மஹாலக்ஷ்மீர் பவேந் நித்யம் ப்ரஸன்னா வரதா சு'பா ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கு அகவல்.

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
சோதி மணிவிளக்கே சீதேவி பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாக்ஷித் தாயாரே
பசும்பொன் விளக்குவைத்துப் பஞ்சுத் திரிபோட்டு
குளம்போல் எண்ணெய் விட்டுக் கோலமுடன் ஏற்றிவைத்தேன்
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடிவிளங்க
வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான்விளங்க
மாளிகையில் சோதியுள்ள மாதாவைக் கண்டுவந்தேன்
தரணியிலே சோதியுள்ள தாயாரைக் கண்டுவந்தேன்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாருமம்மா
பெட்டி நிறையப் பூஷணங்கள் தாருமம்மா
பட்டி நிறையப் பால்பசுவைத் தாருமம்மா
கொட்டகை நிறையக் குதிரைகளைத் தாருமம்மா
பக்கத்தில் நில்லுமம்மா புகழ்மாலை தாருமம்மா
அல்லும் பகலும் என்றன் அண்டையிலே நில்லும் அம்மா
சேவித் தெழுந்நிருந்தேன் தேவி வடிவம் கண்டேன்
வச்சிரக் கிரீடம் கண்டேன் வைடூர்ய மேனி கண்டேன்
முத்துக் கொண்டை கண்டேன் முழுப்பச்சை மாலை கண்டேன்
சவுரி முடி கண்டேன் தாழைமடல் சூடக்கண்டேன்
பின்னல் அழகு கண்டேன் பிறைபோல நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன் தாயார் வடிவம் கண்டேன்
குறுக்கிடும் நெற்றி கண்டேன் கோவைக்கனி வாயும் கண்டேன்
கமலத் திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுக் கண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலை அசையக் கண்டேன்
கைவளையல் கலகலென்னக் கணையாளி மின்னக் கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க ஒட்டியாணம் தகதகவென் றொளிரக்கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் காலாழி பீலி கண்டேன்
மங்கள நாயகியை மனங்குளிரக் கண்டேன்யான்
அன்னையே அருந்துணையே அருகிருந்து காருமம்மா
வந்த வினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயான உன்றன் தாள்களிலே சரணம் என்றேன்
மாதாவே உன்றன் மலரடியில் நான் பணிந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசங்கரர் அருளிய பொன்மழைப் பாடல்

# ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்ரம்

அங்கம் ஹரே: புலகபூஷண மாச்'ரயந்தீ
ப்ருங்காங்கநேவ முகுளாபரணம் தமாலம் |
அங்கீக்ருதாகில விபூதி ரபாங்கலீலா
மாங்கல்யதாஸ்து மம மங்கள தேவதாயா: ||

முக்தா முஹுர்விதததீ வதநே முராரே:
ப்ரேம த்ரபா ப்ரணிஹிதானி கதாகதானி |
மாதா த்ருசோ'ர் மதுகரீவ மஹோத்பலேயா
ஸா மே ச்'ரியம் திச'து ஸாகரஸம்பவாயா: ||

ஆமீலிதாக்ஷமதிகம்ய முதா முகுந்தம்
ஆனந்தகந்த மநிமேஷ மநங்க தந்த்ரம் |
ஆகேகரஸ்த்தித கநீநிகபக்ஷ்ம நேத்ரம்
பூத்யை பவேத் மம புஜங்க ச'யாங்கநாயா: ||

பாஹ்வந்தரே மதுஜித: ச்'ரிதகௌஸ்துபே யா
ஹாராவலீவ ஹரிநீலமயீ விபாதி |
காமப்ரதா பகவதோ(அ)பி கடாக்ஷமாலா
கல்யாணமாவஹது மே கமலாலயாயா: ||

காலாம்புதாளி லலிதோரஸி கைடபாரே:
தாத்ரே ஸ்ப்புரதி யா தடிதங்கநேவ |
மாது: ஸமஸ்தஜகதாம் மஹநீயமூர்த்தி:
பத்ராணி மே திச'து பார்க்கவ நந்தநாயா: ||

ப்ராப்தம் பதம் ப்ரதமத: கலு யத்ப்ரபாவாத்
மாங்கல்யபாஜி மதுமாதிநி மன்மதேன |
மய்யாபதேத் ததிஹ மந்தர மீக்ஷணார்த்தம்
மந்தாஸனம் ச மகராலய கன்யகாயா: ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விச்'வாமரேந்த்ர பத விப்ரம தான தக்ஷம்
ஆநந்தஹேது ரதிகம் முரவித்விஷோ(அ)பி |
ஈஷன் நீஷீதது மயி க்ஷண மீக்ஷணார்த்தம்
இந்தீவரோதர ஸஹோதர மிந்திராயா: ||

இஷ்டாவிசி'ஷ்டமதயோபி யயா தயார்த்ர
த்ருஷ்ட்யா த்ரிவிஷ்டப பதம் ஸுலபம் லபந்தே |
த்ருஷ்டி: ப்ருஹ்ருஷ்ட கமலோதர தீப்திரிஷ்டாம்
புஷ்டிம் க்ருஷீஷ்ஷ மம புஷ்கர விஷ்டராயா: ||

தத்யாத் தயானுபவனோ த்ரவிணாம்பு தாராம்
அஸ்மின்நகிஞ்சன விஹங்கசி'சௌவிஷண்ணே |
துஷ்கர்மகர்ம மபநீய சிராய தூரம்
நாராயண ப்ரணயினீ நயனாம்புவாஹ: |

கீர்த்தேவதேதி கருடத்வஜ ஸுந்தரீதி
சா'கம்பரீதி ச'சி'சேகர வல்லபேதி |
ஸ்ருஷ்டிஸ்த்திதி ப்ரளயகேளிஷு ஸம்ஸ்த்திதாயை
தஸ்யை நமஸ்த்ரிபுவநைக குரோஸ்தருண்யை ||

ச'ருத்யை நமோ(அ)ஸ்து சு'பகர்ம பலப்ரஸூத்யை
ரத்யை நமோ(அ)ஸ்து சு'பகர்மபலப்ரதாயை |
ச'க்த்யை நமோ(அ)ஸ்து சதபத்ரநிகேதநாயை
புஷ்ட்யை நமோ(அ)ஸ்து புருஷோத்தம வல்லபாயை ||
நமோ(அ)ஸ்து நாளீக நிபாநநாயை
நமோ(அ)ஸ்து துக்தோததி ஜன்மபூம்யை |
நமோ(அ)ஸ்து ஸோமாம்ருத ஸோதராயை
நமோ(அ)ஸ்து நாராயண வல்லபாயை ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமோ(அ)ஸ்து ஹேமாம்புஜ பீடிகாயை
நமோ(அ)ஸ்து பூமண்டலநாயிகாயை |
நமோ(அ)ஸ்து தேவாதிதயாபராயை
நமோ(அ)ஸ்து சா'ர்ங்காயுத வல்லபாயை ||

நமோ(அ)ஸ்து தேவ்யை ப்ருகுநந்தநாயை
நமோ(அ)ஸ்து விஷ்ணோருரஸி ஸ்த்திதாயை |
நமோ(அ)ஸ்து லக்ஷ்ம்யை கமலாலயாயை
நமோ(அ)ஸ்து தாமோதர வல்லபாயை ||

நமோ(அ)ஸ்து காந்த்யை கமலேக்ஷணாயை
நமோ(அ)ஸ்து பூத்யை புவனப்ரஸூத்யை |
நமோ(அ)ஸ்து தேவாதிபிரர்ச்சிதாயை
நமோ(அ)ஸ்து நந்தாத்மஜ வல்லபாயை ||

ஸம்பத்கராணி ஸகலேந்த்ரியநந்தநானி
ஸாம்ராஜ்யதாத விபவாநி ஸரோருஹாக்ஷி |
த்வத்வந்தநாதி துரிதா ஹரணோத்யதானி
மாமேவ மாதரநிச'ம் கலயந்து மான்யே ||

யத்கடாக்ஷ ஸமுபாஸநாவிதி:
ஸேவகஸ்ய ஸகலார்த்த ஸம்பத: |
ஸந்தனோதி வசனாங்க மானஸை:
த்வாம் முராரி ஹ்ருதயேச்'வரீம் பஜே ||

ஸரஸிஜநிலயே ஸரோஜஹஸ்தே
தவல தமாம்ஸுக கந்தமால்யசோ'பே |
பகவதி ஹரிவல்லபே மநோஜ்ஞே
த்ரிபுவனபூதிகரி ப்ரஸீத மஹ்யம் ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கஸ்திபி: கனககும்ப முகாவஸ்ருஷ்ட
ஸ்வர்வாஹி விமலாசாருஜலப்லுதாங்கீம் |
ப்ரதர்நமாமி ஜகதாம் ஜனனீ மசே'ஷ
லோகாதிநாத க்ருஹிணீ மம்ருதாப்தி புத்ரீம் ||

கமலே கமலாக்ஷவல்லபே த்வம்
கருணாபூர தரங்கிதை ரபாங்கை: |
அவலோகய மாமகிஞ்சனானாம்
ப்ரதமம் பாத்ரமக்ருத்ரிமம் தயாயா: ||

ஸ்துவந்தி யே ஸ்துதிபி ரமீபி ரன்வஹம்
த்ரயீமயீம் த்ரிபுவனமாதரம் ரமாம் |
குணாதிகா குருதர பாக்யபாகின:
பவந்தி தே புவி புதபாவிதாச'யா: ||

## SRI KANAGADHARA STOTRAM

Ankam hareh pulakabhu sanmasrayanti
Bhrnganeva mukulabharanam tamalam
Angikrtakhila vibhutirapangalila
Mangalyadastu mama mangaladevatayah

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Visvamarendra padavi bhramadana daksa
Mananda heturadhikam muravidvisopi
Isan nisidatu mayi ksnamiksanardha
Mindivaradara sahodaramindirayaha

Amilitaksamadhigamya muda mukunda
Manamdakandamanimesamanamga tantram
Akekara sthita kaninika paksmanetram
Bhutyai bhavenmama bhujangasayanganayah

Bahvantare madhujitah srita kaustubhe ya
Haravaliva harinilamayi vibhati
Kamaprada bhagavataspi kataksamala
Kalyanamavahatu me kamalalayayah

Kalambudali lalitorasi kaitabhareh
Dharadhare spurati ya tadidanganeva
Mutus samasta jagatam mahaniyamurtir
Bhadrani me disatu bharyava nandanayah

Praptam padam prathamtah khali yatprabhavat
mangalyabhaji madhumthini manmathena
mayyapatet tadiha manthamiksanardham
mandalasam ca makaralaya kayakayah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dadyatdayanupavano dravinambudhara
Masminnakimcana vihangasisau visanne
Duskarma dharmamapaniya ciraya duram
Narayana pranayani nayanambu vahah

Ista visitamatayopi yaya dayardra
Drtya trivistapa padam sulabham labhante
Drstih prahrsta kamalodara diptiristham
Pustim krsita mama puskara vistarayah

Girdevateti garudadhvaja sundariti
Sakambariti sasisekara vallabheti
Srstisthiti pralaya kelisu samsthitayai
Tasyai namastribhu vanaikaguro starunyai

Srutyai namostu subhakarma phalaprasutyai
Ratyai namostu ramaniya gunarnavayai
Saktyai namostu satapatra niketanayai
Pustyai namostu purusottama vallabhayai

Namostu nalika nibhananayai
Namostu dugdhodadai janmabhumyai
Namostu somamrta sodarayai
Namostu narayana vallabhayai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Namostu hemambuja pidhikayai
Namostu bhumandala nayikayai
Namostu devadidayaparayai
Namostu sarngayudha vallabhayai

Namostu devyai bhrgunandanayai
Namostu visnorurasi sthitayai
Namostu laksmyai kamalalayayai
Namostu damodara vallabhayai

Namostu kantyai kamaleksanayai
Namostu bhutyai bhuvanaprasutyai
Namostu devadibhirarcitayai
Namostu nandatmaya vallabhayai

Sampatkarani sakalendriya nandanani
Samrajyadana vibhavani saroruhani
Tvadvandanani duritaharanodyatani
Mameva mataranisam kalayantu manye

Sarasijanilaye sarojahaste
Dhavalataramsuka gandhamalya sobhe
Bhagavati harivallbhe manonje
Tribhuvana bhutikari prasida mahyam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yatkataksa samupasana vidhih
Sevakasya sakalartha sampadah
Santanoti vacananya manasais
Tvam murari hrdayesvarim bhaje

Digdhastibhih kanaka kumbha mukha vasrsta
Svarvahini vimala caru jalaplutangim
Pratar namami jagatam janani masesa
Lokadhinatha grhini mamrtabdhi putrim

Kamale kamalaksa vallabhe tvam
Karunapura tarangitai rapangaih
Avalokaya mamakincananam
Prathamam patramakrtrimam dayayah

Stuvanti ye stutibhirami bhiranvaham
Trayimayim tribhuvana mataram ramam
Gunadhika gurutara bhagya bhagino
Bhavanti te bhuvi budha bhavitasayah

Iti sri sankara bhagavatah krtau sri kanakadhara stotram sampurnam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில தகவல்கள்...................

குத்துவிளக்கின் ஐந்து முகங்கள் குறிப்பன:-

ஆதித்தன், அம்பிகை, விஷ்ணு, கணபதி, மகேசன்.

அன்பு, மனஉறுதி, நிதானம், சகிப்புத்தன்மை, சமயோசித புத்தி.

தத்துவம்

அடிப்பாகம்- மூலாதாரம்.
தண்டு - சுஷும்னா நாடி.
மேற்பகுதி - தலைப்பாகம்.
ஜ்வாலை - புருவமத்தியில் தோன்றும் ஞான ஒளி.

விளக்கேற்றும் எண்ணெய்:
கணபதிக்கு தேங்காயெண்ணெய் சிறப்பு.
மஹாலக்ஷ்மிக்கு பசுநெய் சிறப்பு.
ஏனைய தெய்வங்களுக்கு : வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், தேங்காயெண்ணெய்.

பலன்கள்

நெய் - ஞானம்.
இலுப்பெண்ணெய் - ஆரோக்கியம்.
ஆமணக்கெண்ணெய் - சௌபாக்கியம்.
நல்லெண்ணெய் - யமபயம் அகலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுகம் : மத்திமம்
இருமுகம்: குடும்ப ஒற்றுமை.
மும்முகம் - புத்திரசுகம்
நான்கு முகம் - பால்பசு, மனை, செல்வம்.
ஐந்து முகம் - செல்வ விருத்தி.

கிழக்குத்திசை - துன்பம் நீங்கும்.
மேற்குத்திசை - கடன் தொல்லை நீங்கும்.
வடக்குத்திசை - சர்வமங்களம் உண்டாகும்.
தெற்குத்திசை
- இத்திசை நோக்கி விளக்கேற்றலாகாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேத விழுமியங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் எனும் பிரணவத்தின் ஒளியே வேதம்
உலகத்தின்ஆதாரம் இதுவேஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஸ்ரீ ஆதிசங்கரரின்
## கடைசி உபதேசம்



வேதத்தைப் படியுங்கள்.
படிப்பதோடு நிறுத்தி விடாதீர்கள்.
அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.
அர்த்தத்தைப் புரிந்து கொள்வதோடு
நின்றுவிடாதீர்கள்.
அதன்படி நடக்க முயற்சியுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் யார்?

இந்த உலகத்தைப் படைத்து ஒளிபெறச் செய்தவர். இந்தப் பிரளயத்தைத் தோற்றுவத்தவர். இந்த உலகின் அதிபர். இந்த உலகத்தில் உயிர்கள் தோன்றவும், நிலைத்திருக்கவும், மறைவதற்கும் காரணமானவர் இறைவன். அவரே பரமாத்மா.(ரி.வே. 10, 129, 7)

## பரம்பொருளிடம் பக்தி கொள்வோம்

ஏ மாந்தரே, சூரியன் முதலிய ஒளிரும் பொருளுக்கு ஆதாரம் இறைவன். பூமி முதல் சூரியன் வரை படைப்பு முழுவதையும் ஆக்கி, தாங்கி நிற்பவர் அந்த பரமாத்மாவே. அந்தப் பரம்பொருளிடம் நாம் பக்தி கொண்டு அவரை வழிபடுவோமாக. (ரி.வே. 10, 127, 1)

## பரமாத்மாவான இறைவனிடம்

## அன்போடு பக்தி செலுத்துவோம்

ஏ மாந்தரே!, உடலில் உயிரை ஓடச் செய்பவன் எல்லாம் வல்ல இறைவனே. நமக்கு பலம் அளிப்பவனும் அவனே. எல்லா உயிர்களின் மீதும் அன்பு கலந்த ஆட்சி செய்பவன் அந்தப் பரம் பொருளே. அந்தப் பரமாத்மாவிடம் நாம் அன்போடு பக்தி செலுத்துவோமாக.

(ரி.வே. 10, 127, 2)

## இறைவா! என் உள்ளத்தில் உள்ள

## பாவங்களையெல்லாம் கழுவி விடு

ஏ நீரின் தெய்வமே, என் அகத்தில் உள்ள பாவங்களையெல்லாம் கழுவிப் போக்கி விடு. என் உள்ளே இருக்கும் துரோக சிந்தனை, என் வாயில் இருந்து வரும் தீய சொற்கள், என் நடத்தையில் உள்ள தவறுகள் ஆகியவற்றை அகற்றித் தூய்மையாக்கு. (ரி.வே. 10, 9, 8)

## எல்லா மனிதர்களும் அன்போடு

## இணைந்து, இணக்கமாய் வாழ வேண்டும்

எல்லா மாந்தரும் இணக்கமாய் வாழ்ந்து வருவார்களாக. எல்லோரும் அன்போடு உரையாடட்டும். அனைவர் உள்ளங்களிலும் ஒற்றுமை உணர்வு நிலவட்டும். எல்லோரும் பகைமை வளர்க்காத அறிவைப் பெறட்டும். நாம் நல்லறிவு பெற்றுக் கடவுள் வழிபாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைந்திருப்போம். உங்கள் அனைவரது எண்ணங்களும் ஒன்று போல் அமையட்டும். நீங்கள் அனைவரும் கொள்ளும் உறுதிகளும் ஒன்று போல் இருக்கட்டும். உங்கள் நோக்கங்கள் ஒன்று போல் இருக்கட்டும். உங்கள் அனைவரது உள்ளங்களிலும் ஒரே வகையான உயர்ந்த பாவனை இருந்து வரட்டும். நீங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் உதவியாய் இருங்கள். தத்தம் காரியங்களையும் சிறப்பாகச் செய்து முடியுங்கள். (ரி.வே. 10, 191, 2,4)

நல்ல நண்பர்கள் வழியில் நாமும் நடப்போம். நண்பர் காட்டியுள்ள உயர் வழியில் என்றும் நடப்போம். அகிம்சை மார்க்கத்தில் செல்லும் நண்பர்களுக்குக் கிடைக்கும் நலன்கள் எனக்கும் கிடைக்கட்டும். (ரி.வே. 5, 64, 3)

## சத்தியம் நம்மைக் காக்கட்டும்

இந்த வானம், உண்மை உரையின் மீதே நிலைத்திருக்கிறது. அகில உலகமும் எல்லா உயிர்களும் உண்மையின் ஆதாரவிலேயே வாழ்கின்றன. ஒவ்வொரு நாளும் பொழுது விடிவது சத்திய நிலையால்தான். அந்த சத்தியம் நம்மைக் காப்பதாக. (ரி.வே. 10,37,2)

## உண்மையின் உயர்வு

சூரியன் புவியைத் தழுவியிருப்பது போல, ஆகாயத்தை அக்னியும் சத்தியக் கோட்பாடுகளும் தாங்கி நிற்கின்றன. (ரி.வே. 1, 67, 3)

## தவமும் சத்தியமும்

ஒளிமயமான தவத்திலிருந்து யாகமும் சத்தியமும் தோன்றுகின்றன. (ரி.வே. 10, 190, 1)

## இறைவன் சத்தியத்தைக் காத்து அசத்தியத்தை அழிக்கிறான்

அறிஞர்கள் சத்தியமும், அசத்தியமும், மெய்யும் பொய்யும் தமக்குள் போட்டி போட்டுக் கொண்டிருப்பதை அறிவார்கள். சோமதேவன் சத்தியத்தைக் காத்து அசத்தியத்தை அழிக்கிறான். (ரி.வே. 7, 104, 12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இறைவன் எனக்குத் திறமையைக் கொடுக்கட்டும்

ஏ சோம தேவரே, நீர் எங்கள் மனத்தை சீரிய காரியங்களால் திறமை பெற்றுத் திகழுமாறு அருள்புரிய வேண்டும். (ரி.வே. 10, 25,1)

### தெய்வத்திற்கு சோம்பேறியையும் மறதியுள்ளவனையும் பிடிக்காது

தெய்வங்களுக்கு சோம்பேறியையும் மெய்ம்மறதி உள்ளவனையும் ஒருக்காலும் பிடிக்காது. (ரி.வே. 8, 2, 18)

### உழைத்துப் பாடுபடு

தெய்வங்களுக்கு உழைத்துப் பாடுபடுகிறவர்களைக் கண்டால் மிகவும் பிடிக்கும். (ரி.வே. 4, 33, 11)

### பசுவின் உயர்வு

ஏ, இம்சிக்கத் தகாத, அழகிய, பாக்கியமுள்ள பசுவே, நீ வைக்கோலைத் தின்றே வாழ்கின்றாய். நீ எங்களுக்கும் நற்பேற்றை அளித்து பாக்கியவான்களாக ஆக்கு. நீ புல்லைத் தின்று, சுத்த நீரை அருந்துகிறாய். (ரி.வே. 1, 164, 40)

### நிலத்தை உழுது பயிர் செய்

"சூதாடுபவனே"
நீ விவசாயம் செய்து உழைப்பதனால்தான், உனக்கு மாடுகளும், மனைவியும் கிடைத்திருக்கிறார்கள் என்று சூரிய பகவான் கூறுகிறார். (ரி.வே. 10, 34, 13)

### உழும் கலப்பை உயர்ந்தது

விவசாயத்திற்குப் பயன்படும் நிலத்தை உழுவதற்கு உதவும் கலப்பை, உணவு தானியங்கள் கிடைக்க உதவுகிறது. உழுது அதன் பலனாக ஏர்க்கால் ஒவ்வொன்றிலிருந்தும் ஏராளமான தானிய மணிகளைத் தந்து உதவுகிறது. (ரி.வே. 10, 117, 7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே இடத்தில் செல்வம் நிலைத்திருப்பதில்லை

தேரின் உருளை பல திசைகளிலும் சுழன்று செல்வதைப் போல், செல்வமும் பலரிடம் போவதும் வருவதுமாயிருக்கிறது. அது என்றும், ஒரே மனிதனிடத்தில் நிலைத்து இருப்பதில்லை. (ரி.வே. 10, 117, 5)

## பேராசை வேண்டாம்

ஒருவரிடம் குறைந்த செல்வம் இருந்தால் அத்தோடு அவன் நிம்மதி அடைவதில்லை. அவன் – அவனைவிட அதிகமாக செல்வம் உள்ளவனிடம் யாசிக்கிறான். இவ்வாறு செல்வம் குறைவாய் உள்ளவன் அதிகம் உள்ளவனிடம் பேராசையால் கை ஏந்துகிறான். உலகமே பெரும்பாலும் இப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறது.

(ரி.வே. 10,117, 8)

## பகிர்ந்து அளித்து உண்பாயாக

தாரான மனையில்லாதவன் வீட்டில் உணவு கொள்ளாதே. ஏனென்றால் அவன் அளிக்கும் உணவு விஷத்திற்கு ஒப்பானது. தன் உணவை நண்பர்களுக்கும், தெய்வங்களுக்கும் படைக்காமல் தானே தனியாக உண்பவன் அறிவில்லாதவன். அவன் உண்பது சோறல்ல, அது முழுதும் பாவம் தான். (ரி.வே. 10, 127, 6)

## பசியோடு வருபவனுக்கு உணவளிப்பதே மேல்

பசித்தவன் ஒருவன் உணவு வேண்டும் போது, மிகுதியாகப் பணமும், பொருளும் உள்ளவன், தனது உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டு யாசிப்பவனுக்கு ஏதும் அளிக்காமல், தான் மட்டும் உண்டால் அது அவனுக்குத் துன்பம் விளைவிக்கும். (ரி.வே. 10, 117, 2)

## கஞ்சனும் மனத் திருந்தி தானதர்மம் செய்ய வேண்டும்

எங்களை இன்னல்கள் பலவற்றிற்கு உள்ளாக்கி, அதன் மூலம் எங்கள் உள்ளத்தைத் தூய்மையாக்கும் இறைவா! தானமளிக்க விரும்பாதவன் மனம் திருந்தி தானமளிக்க முன் வருமாறு செய். கஞ்சன் மனத்தையும் இளக்குவாயாக. அவனையும் வள்ளலாக்கு. (ரி.வே. 6, 53, 3)

## தானமளிப்பவனுக்கு புண்ணியம் கிடைக்கும்

தானமளிப்பவனுக்கு மிகுதியாகப் புண்ணியம் கிடைப்பதால், உன்னிடம் வந்து உணவு கோருபவனுக்கு நீ அதை அளிக்கத் தவறாதே.

(ரி.வே. 10, 117, 5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தானம் செய்பவனுக்கு

### வேள்வி செய்த நற்பலன் கிடைக்கிறது.

உணவு கோரித் தன்னிடம் வந்து நிற்கும் ஏழைக்கு உணவு அளிப்பவனுக்கு, அவன் செய்த தானத்தின் மகிமையால், வேள்வி செய்த பலன் கிடைக்கிறது. அவனிடம் பகைவனும் நண்பனாக மாறுவான். (ரி.வே. 10, 117, 3)

### மணமகளின் அன்பு

ஏ மணமகளே! நீ உன் மாமியையும், மாமனையும், நாத்தியையும், மைத்துனன், கொழுந்தன் ஆகிய எல்லோரிடமும் அன்போடு பழகி ராணி போல் ஆட்சி நடத்துவாயாக. (ரி.வே. 10, 85, 46)

### உடல் வலிமையும், ஆன்மிக வலிமையும்

### இணைய வேண்டும்

பிராமண நிலையில் வாழ்பவரைப் பாதுகாப்பதால் அன்பு வளரும். க்ஷத்திரிய நிலையில் வாழ்பவரை அரவணைத்தால் வீரம் பெருகும். பசுவைப் பாதுகாத்தால் மக்களின் சக்தி கூடும். வீரனின் புஜபலமும், அறவோரின் ஆன்மீக ஒளியும் ஒன்று சேர வேண்டும். உடல் வலிமையோடு ஆன்மிக வலிமையும் இணைய வேண்டும். ஞான பலமும், விஞ்ஞான பலமும் ஒன்று சேர வேண்டும். (ரி.வே. 8:35 16.1,8)

### அக்னியின் மகிமை

அக்னி தேவனே! நீ விதிமுறைகள் தெரிந்தவன். ஆகையால் எங்களை நல்வழியில் அழைத்துச் செல். எங்கள் பாவங்களைப் போக்கு. நாங்கள் உன்னை வணங்குகிறோம். (ரி.வே. 1, 189, 4)

நம் வீரர்கள் மேலும் மேலும் முன்னேறட்டும். (ரி.வே. 10.103.11)

வள்ளல்கள் அழியாப் புகழ் பெறுகின்றனர். (மோட்ச சுகம் பெறுகின்றனர்). (ரி.வே. 1.125.6)

தீமை செய்வோர் நற்கதி (சுகம்) பெறமாட்டார். (ரி.வே. 7.104.7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவன் மனிதனே அல்ல. (ரி.வே. 10.22.8)

எவரையும் இழிவு செய்யாதே. (ரி.வே. 4.5.2)

நம் நண்பர்கள் எண்ணிக்கை பெருகட்டும். (ரி.வே. 7.32.25)

தான் மட்டுமே உண்போன் பாவியாகிறான். (ரி.வே. 10. 117.6)

சோம்பேறி சமூக விரோதி. (ரி.வே. 10.22.8)

திடமாக, தெளிவாகப் பேசு. (ரி.வே. 1.28.5)

அறவழி அனைத்து இன்பமும் அனுபவிக்க, இறைவா, அருள்வாய்
(ரி.வே. 5.28.6)

சூதாட்டம் வேண்டாம் (ரி.வே. 10.34.13)

தீயவர்க்கு இவ்வுலகில் சுகம் இல்லை. (ரி.வே. 8.47.12)

நாம் சுதந்திர நாட்டில் பாடு படுவோம், பல தொழில் செய்வோம்.
(ரி.வே. 5.66.6)

தானம் செய்வோனின் செல்வம் ஒளி பெறுகின்றது. (ரி.வே. 1.22.8)

ஒன்றுபட்டுச் செல்வீர். (ரி.வே. 10.191.2)

பணிவுடன் உண்மை பேசு (ரி.வே. 4.5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தால் செல்வம் சேரும். (ரி.வே. 10.151.4)

நம்மிடையில் கஞ்சர்கள் (செல்வமும் அறிவும் தானம் செய்யாதவர்கள்) இருக்க வேண்டாம். (ரி.வே. 10.57.1)

மனத்தை நன்மை – மேன்மையுள்ளதா ஆக்குவீர். (ரி.வே. 8.19.20)

அறிஞர்களுடன் சேர்ந்து இருப்போம். (ரி.வே. 5.51.15)

கடவுள் ஒருவரே. அவரே உலகங்கள் எல்லாவற்றுக்கும் தலைவர். (ரி.வே. 6.36.4)

உங்கள் இதயங்கள் ஒன்றுபடுக. (ரி.வே. 10.191.4)

மனிதா! உனக்கென ஒரு தாயகம் (தாய்நாடு) பெறுவாயாக. (ரி.வே. 10.18.10)

நாம் அறிஞர்களுடன் நட்புக் கொள்வோம். (ரி.வே. 1.89.2)

கடவுளை நம்பினோர் வெற்றி பெறுவர். (ரி.வே. 8.16.5)

புதிய தொழில் பல செய்வோம். (ரி.வே. 1.31.8)

இறைவா! நீ மக்களுக்கு மிக அருகில் உள்ளவன் (ரி.வே. 8,60.16)

விடாமுயற்சி செய்கிறவன் செல்வங்களை வெல்கின்றான். (ரி.வே. 4.50.9)

எல்லாத் திசைகளிலிருந்தும் நல்லுணர்வுகள், நற்செயல்கள் நம்மை வந்தடையட்டும். (ரி.வே. 1.89.1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்னிபோன்றஞானிகள், அரக்கர்களையும் தம் வசப்படுத்துகின்றனர்
(ரி.வே. 7.15.10)

பாதிக்கப்பட்டோருக்கு – துன்பமுற்றோருக்கு – உதவும் கரங்களே மேலானவை. (ரி.வே. 6.18.4)

இல்லற வாழ்வில் பெண்ணே தலைமை வகிக்கின்றவள்.
(ர.வே. 8.33.19)

மனிதனாக – மனிதத் தன்மை உள்ளவனாக – இரு.(ரி.வே. 10.53.6)

அறவழிநின்று வியர்வை சிந்தி, செல்வம் சேர்ப்பாயாக.
(ரி.வே. 10.67.7)

விடியற் காலையில் எழுவோன், வாழ்வின் முற்பகுதியிலேயே செல்வம் பெறுவன். (ரி.வே. 1.125.1)

நாம் – தடைகள், துன்பங்களைக் கடந்து செல்வோம்.
(ரி.வே. 8.43.30)

ஒருவரோடொருவர் போரிட வேண்டாம். (ரி.வே. 10. 134.7)

இனிய உண்மை வாக்குகளே இன்பம் தரும். (ரி.வே. 6.48.20)

நாம் மனிதரிடை புகழ் பெற்று விளங்குவோம். (ரி.வே. 4.51.11)

கொடைவள்ளல்களின் செல்வம் ஒருபோதும் குறையாது.
(ரி.வே. 10.117.1)

நற்குலத்தோரும் வீரர்களும் எல்லோருக்கும் சேவை செய்கின்றனர்.
(ரி.வே. 7.1.15)

உத்தம சுகம் பெற ஞானிகளை உபசிப்பீர்; மகிழ்விப்பீர்.
(ரி.வே. 10.63.3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உழைக்கின்றேன்; மீண்டும் மீண்டும் முயல்கின்றேன்; சேவை செய்கின்றேன். செல்வம் – புகழ் பெறுகின்றேன். (ரி.வே. 3.54.3)

நாம் எல்லா பகை – இடையூறுகளைக் கடந்து வெற்றி பெறுவோமாக. (ரி.வே. 2.40.5)

அரசே! திருடர் எம்மைத் துன்புறுத்தாமலிருக்குமாறு செய். (ரி.வே. 6.71.3)

இறைவா! யாம் அச்சமற்றிருக்க அருள். (ரி.வே. 8.61.13)

அரசே! கொள்ளை லாபமடிக்கும் வணிகரை அழிப்பாய். அவர்கள் ஓநாய் போன்றவர்கள். (ரி.வே. 6.51.4)

அரசனே, அறிஞர்களை உன்னுடன் சேர்த்துக் கொள். (ரி.வே.10.1.6)

உயிர்கள் அனைத்தும் இறைவன் வசம். (ரி.வே. 10.190.1)

காக்கை முதலியன வாழும் பெரும் மரங்களை, வனங்களை அழிக்காதீர். (ரி.வே. 6.48.17)

நற்செயல் புரிவோர் பகையற்றவராவர். (ரி.வே.7.79.2)

ஒளிமயமான இறைவன் உலகம் அனைத்தும் ஒளியுறச் செய்கின்றான். (ரி.வே. 7.76.1)

தானம் செய்வோர் பகைவரை வெல்கின்றனர். (ரி.வே. 6.68.5)

நல்ல மனம் உடையோர் ஈடுபாட்டுடன் நல்லவிதமாகச் செயலாற்றுகின்றனர். (ரி.வே. 10.64.7)

நெய்யை விட, தேனைவிட இனிதாக உங்கள் வாக்கு இருக்கட்டும். (ரி.வே. 8.24.20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அறிவு, ஐயமின்றி எல்லா நலன்களியும் அளிக்கிறது.
(ரி.வே. 7.96.3)

செல்வமும் சிறப்பும் பெற மனிதர்கள் விழிப்புடன் செயலாற்றுக.
(ரி.வே. 5.59.3)

திறமை சுகம் தரும். (ரி.வே. 5.17.5)

அறிஞர் உண்மையைப் பரவச் செய்கின்றனர் (ரி.வே.8.6.2)

உன் நட்பு கபடம் – வஞ்சனையற்றதாக இருக்கட்டும்
(ரி.வே.6.48.18)

இறைவன் நம் அறிவினைத் தூண்டி நல்வழி செலுத்துவானாக.
(ரி.வே. 3.62.10)

நான் அமர ஆத்மா. மரணத்திடம் ஒருபொழுதும் தோற்க மாட்டேன்.
(ரி.வே. 10.48.5)

மனிதர் மனிதரை எல்லாவிதமாகவும் நன்கு பாதுகாக்கட்டும்
(ரி.வே. 6.75.14)

எல்லோருக்கும் ஆனந்தம் தரும் செயல்களில் ஈடுபடுங்கள்.
(ரி.வே. 10.101.2)

நல்ல மனிதப் பிறவி எடுத்தவனே, உன் உடலைப் பேணி வளர்த்துக் காப்பாய்.
(ரி.வே. 7.8.5)

பொன்னை = செல்வத்தை தானம் செய்வோர் அம்ருதத்வம் = அழியாப் புகழ் பெறுகின்றனர்
(ரி.வே. 10. 107. 2)

இறைவன், சிந்தனையாளரின் துணைவன் (ரி.வே. 8.17.14)

நற்செயல்கள் நடைபெறும் இடங்களில் இறைவன் வீற்றிருக்கின்றான்.
(ரி.வே. 9.13.9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எல்லா உயிர்களுக்கும் சேவை செய்வோம். (ரி.வே. 10.57.5)

மனிதா! முன்னேறு, வெற்றி கொள். (ரி.வே. 10.103.13)

அறிவிற் சிறந்தவர்களை, பரோபகாரிகளை போற்று, வணங்கு.
(ரி.வே. 1.44.6)

பிறரை நிந்திக்கிறவர்கள் தாமே நிந்திக்கப்படுகின்றனர்.
(ரி.வே. 5.2.6)

புனிதனும் புனிதப் படுத்துவோனுமாகிய பரமாத்மாவை, காயத்ரீ மந்திர கானம் செய்து போற்றுவீர். (ரி.வே. 9.60.1)

பிரம்மமாகிய பரமனே என்னை உள்ளிருந்து காக்கும் கவசம்.
(ரி.வே. 6.75.19)

நாம் எப்பொழுதும் மன மகிழ்வுடன் இருப்போம். (ரி.வே. 6.52.5)

இறைவா! நான் உன்னையே நம்பிப் பற்றுகின்றேன். (ரி.வே. 10.147)

ஆசிரியரே, மாணவரே, நீவிர் இணைந்து அறியாமையை அழிப்பீர்.
(ரி.வே. 6.72.3)

செல்வம் நமக்கு சாந்தியும் சுகமும் அளிப்பதாகட்டும்.
(ரி.வே. 7.35.2)

மனிதா! இறைவன் இயற்றிய காவியமான இவ்வுலகைப் பார்.
(ரி.வே.10.55.5)

நல்லறிஞருடன் சேருவீர். (ரி.வே.1.17.4)

ஒரு பொழுதும் தளராதே. (ரி.வே. 7.33.4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் அறிவு நன்மை தருவதாகட்டும். (ரி.வே. 1.94.1)

அறிஞர்களே, உங்கள் சிந்தனைகளைப் பெருகச் செய்து நிறைவுள்ளதாக்குவீர். (ரி.வே. 10.111.1)

இயன்ற அளவு உடலைப் பேணி பலமுள்ளதாக்கு. (ரி.வே. 10.15.14)

எல்லாம் வல்ல இறைவா! நாங்கள் அச்சமற்றிருக்க அருள்வாய். (ரி.வே. 1.11.2)

நல்லோரைத் துன்புறுத்தாதீர். (ரி.வே. 7.9.5)

வீழ்ந்து கிடப்போரை மீண்டும் உயர்த்துவீர், ஞானிகளே. (ரி.வே. 10.137.1)

நாம் செல்வங்களுக்கு அதிபதிகளாவோம். (தாசர்களாக இரோம்) (ரி.வே. 4.50.6)

கல்வியறிவு நம்மை நிந்தனையினின்றும், நிந்திப்போரிடமிருந்தும் காப்பாற்றும். (ரி.வே. 6.61.11)

நல்வாக்குகளால் வீரர்களை மேன்மைப் படுத்தி உற்சாகமடையச் செய்வீர். (ரி.வே. 1.125.3)

எல்லோரையும் போஷிக்கும் பரமனே! அறிஞர்கள் மூலம் எம்மை வழி நடத்து. (ரி.வே. 6.54.1)

உண்மை எனும் வழி எளிது. (ரி.வே. 8.13.13)

நாம் எப்பொழுதும் மனமகிழ்வுடன் இருப்போம். (ரி.வே. 6.85.3)

எங்கும் நிறைந்த பரமாத்மாவே பேரின்ப ஊற்றாக உள்ளவன். (ரி.வே. 1.154.5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானி கர்வமற்றவன் – பற்று அற்றவன். (ரி.வே. 1.69.2)

இறைவன் நமக்குச் செல்வங்களை நிறையத் தருவானாக.
(ரி.வே. 10.109.1)

தோழர்களே! இறைவன் விரும்பும் விதமாகச் செயலாற்றுங்கள்.
(ரி.வே. 10.103.6)

பகைமையற்றவன் எதனாலும் கலங்கமாட்டான். (ரி.வே. 8.93.15)

இறைவனின் விதிகளை மீற முடியாது, மாற்றவும் முடியாது.
(ரி.வே. 1.24.10)

இறைவன் மனிதர்களின் ரகசியங்களை அறிகின்றவன்.
(ரி.வே. 8.39.3,

ஏழு வித மாந்தருக்கு – கட்டுப்பாடுகளை ஞானிகள் விதித்துள்ளனர். (1. மது அருந்தாதே. 2. சூதாடாதே. 3. விபசாரம் செய்யாதே. 4. வேட்டையாடாதே. (உயிர்களைக் கொல்லாதே) 5. கடும் சொல் கூறாதே. 6. கடுமையாக அடிக்காதே. 7. பிறரை நிந்தனை செய்யாதே.
(ரி.வே. 10.5.6)

நான் ஆத்மா. என் மேன்மையை ஒரு பொழுதும் இழக்க மாட்டேன்.
(ரி.வே. 10.48.5)

சந்திரனைப் போன்று சாந்தமான மாணவனே, நீண்ட ஆயுளுடன் இரு.
(ரி.வே. 4.15.9)

இறைவா! எமக்குச் செயல் திறமைகள் நிறைய அருள்வாய்.
(ரி.வே. 7.32.26)

புலன்களை திருப்தி செய்யுங்கள். (உடல் உறுப்புகளின் தேவைகளை நிறைவேற்றுங்கள்) (ரி.வே. 10.101.7)

உலகுக்கு உபகாரம் செய். மன மகிழ்வுடன் இரு. (ரி.வே. 10.116.2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனம் (பணம்) ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் சென்றவாறு இருக்கிறது. (ரி.வே. 10.117.5)

உபதேசம் செய்யும் ஞானி, மௌனமாக இருக்கும் ஞானியை விட மேலானவர். (ரி.வே. 10.117.7)

உங்கள் மனங்கள் ஒன்றுபட்டுச் சிந்திக்கட்டும். (ரி.வே. 10.191.2)

கோ சாலைகள் - பசுக்களை காத்து வளர்க்கும் குடில்களைக் - கட்டுங்கள். (ரி.வே. 10.101.8)

உங்கள் முடிவுகள் ஒரே விதமாக இருக்கட்டும், உங்கள் இதயங்கள் ஒன்றாகட்டும். (ரி.வே. 10.191.4)

* நம்முடைய மேன்மைக்காக நாம் உண்மையே பேச வேண்டும். (ரி.வே. 8.59.5)

* இந்தப் பரந்த உலகில் நேர்மையைக் கடைப்பிடிப்பவர்கள் சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். (ரி.வே. 9.74.3)

* உண்மையைத் தேடும் முயற்சியில் ஈடுபடுபவர்கள், அதனை நிச்சயம் கண்டுகொள்வார்கள். (ரி.வே. 4.23.10)

* உண்மையைக் கடைப்பிடிப்பவர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் எப்போதும் முழுமையாகப் புரிந்து கொள்வார்கள். (ரி.வே. 10.61.10)

* உண்மையைக் காப்பவரையும், நேர்வழி நடப்பவரையும் எவரும் வெற்றிக்கொள்ள இயலாது. (ரி.வே. 9.73.8)

* உண்மை பேசுவது அன்பையும், இனிய சுகத்தையும் அளிக்கிறது. (ரி.வே. 9.75.2)

* உண்மை என்பது பலம் பொருந்திய அஸ்திவாரத்திற்கு ஒப்பானது. (ரி.வே. 7.61.5)

* தீயவர்கள் உண்மை வழியில் நடக்கமாட்டார்கள். (ரி.வே. 9.73.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• தீய வழியினைக் கடைப்பிடிப்பவர் மனித சமுதாயத்தின் எதிரிகள்.
(ரி.வே. 7.61.5)

• இடைவிடாது உழைப்பவர்கள் மட்டுமே சுகமான வாழ்க்கையைப் பெற முடியும். (ரி.வே.1.73.3)

• அயராது உழைப்பவர்கள், வாழ்க்கையில் தர்மம், அதர்மம், காமம், மோட்சம் ஆகயவற்றின் நன்மை தீமைகளைப் புரிந்து மேன்மையடைவார்கள். (ரி.வே. 1.39.10)

• சுறுசுறுப்பானவர்களைத் தான் கடவுள் விரும்புகிறார். சோம்பேறிகளை அல்ல. (ரி.வே. 8.2.18)

• மனம் தெளிவாகச் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.
(ரி.வே. 10.191.4)

• நீங்கள் யாவரும் ஒன்றாகச் செல்லுங்கள், ஒரே குரலில் பேசுங்கள், உங்கள் மனம், ஒரே கருத்துடையதாக இருந்தால் உங்கள் திட்டம் நிறைவேறும்.
(ரி.வே. 1,191,2)

• விழிப்புடன் இருப்பவர் எதிரிகளிடமிருந்தும், தீயவர்களிடமிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறார்.
(ரி.வே. 9.71.1)

• உண்மையையும் நேர்மையையும் கடைப்பிடிப்பவருக்கு இயற்கை நல்ல ஒத்துழைப்பைக் கொடுக்கும். (ரி.வே. 1.90.6)

• தூய்மையானவர்களைத் தூற்றுவோர் அழிந்து போவார்கள்.
(ரி.வே. 5.12.5)

• சுதந்திரமாகச்செயல்பட்டால்பேரானந்தத்தைஅடையலாம்(ரி.வே.1.15.5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• இந்த பூமியும், ஆகாயமும் நமது தாய் தந்தையர். (ரி.வே.1.89.4)

• மனிதனே! உனது துணிச்சல் தான் உன்னை வெற்றிக்கு இட்டுச் செல்லும். (ரிக். 1.56.2)

• உடல் இளைத்திருந்தாலும், உள்ளத்தில் உறுதியிருந்தால், உடல் திறன் பெற்றவனையும் வெற்றி கொள்ள முடியும். (ரிக். 10.28)

• நம்மைக் காக்கும் கடவுள் நல்லறிவு அளிக்கிறார்.
(ரி.வே. 8.48.14)

• நம்து குரு, என்றும் வற்றாத நூற்றுக்கணக்கான அறிவு ஊற்றுகளுக்கு இருப்பிடம். (ரி.வே. 3.26.9)

• அறிவுடன் செயல்பட்டால் இன்பம் எளிதில் கிடைக்கும்.
(ரி.வே. 9.69.2)

• அறிஞர்கள் தங்களது அறிவைச் சிறந்த செயல்களுக்கு மட்டுமே உபயோகிப்பார்கள். (ரி.வே. 1.144.1)

• இறைவா! எங்களது எண்ணங்களைத் தூய்மைப்படுத்து. நாங்கள் மேற்கொள்ளும் தெய்வ வழிபாட்டின் மூலம் எங்களுக்கு நல்லறிவு கிடைக்கும். (ரி.வே 10. 141. 6)

• தெய்வ வழிபாடு என்பது இவ்வுலக வாழ்வின் ஒரு அங்கம்.
(ரி.வே. 10.164.35)

• முயற்சியோடு செயல்படும் ஆன்மிகவாதிக்கு இறைவன் தேவையான சக்தியைக் கொடுக்கிறார். (ரி.வே. 1.1.83.3)

• முதன் முதலில் யாகத்தைச் செய்தவர், அதர்வ முனிவர்.
(ரி.வே. 1.83.5)

• இறைவனை மகிழ்விப்பதற்குச் சிறந்த வழி, அவனை வழிபடுவதுதான். (ரி.வே. 1.107.1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• இறைவா! உன்னை வழிபடுபவர்களின் மனதிலிருந்து அறியாமை என்னும் இருளை விலக்கி விடு. (ரி.வே. 5.393)

• வழிபாட்டுக்கு உரியவன் இறைவன் மட்டுமே. (ரி.வே.8.1.1)

• இறைவனிடம் கை ஏந்தாதவர் எவர் உளர்? (ரி.வே. 8.1.20)

• தேவையானவர்களுக்குத் தானம் அளிக்காத செல்வந்தர்களின் சொத்துக்களை, கடவுள் அவர்களிடமிருந்து பிரித்து விடுவார்.

(ரி.வே. 4.25.7)

• இறைவா! நாங்கள் உன்னைச் சார்ந்தவர்கள்; நீ எங்களைச் சார்ந்து அருள் புரிவாயாக. (ரி.வே. 8.92.32)

• இறைவா! உனது பக்தன், எதிரிகளின் பாசறையிலும் உண்பதற்கு ஏதேனும் பெறுவான். (ரி.வே. 8.108.5)

• கல்விக்கரசி நமது அறிவை பலப்படுத்தட்டும். (ரி.வே. 2.3.8)

• இறைவனது அருள் இருந்தால் தரிசு நிலமும் செழிப்பான பூமியாகப் பலன் கொடுக்கும். (ரி.வே. 10.113.3)

• கடவுளைத் தவிர வேறு எவராலும் நமக்கு சுகத்தை அளிக்க முடியாது. (ரி.வே. 10.64.2)

• கடவுளால் கொடுக்கப்பட்ட சொத்து எப்போதும் மங்களகரமானது. (ரி.வே. 8.62.1)

• கடவுளின் திருவருளைப் பெற்றவர்கள் வெற்றி காண்பார்கள். (ரி.வே. 8.16.5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சரஸ்வதி தேவியே! உன்னைத் துதிப்பவர்களுக்கு நல்லருள் புரிவாயாக. (ரி.வே. 6.61)

* சுயகட்டுப்பாடுடைய விருந்தாளியை நமது வீட்டிற்கு அழைத்து உபசரிக்க வேண்டும். (ரி.வே. 5.45)

* இறைவனிடத்தில் என்னுடைய பக்தி நிரந்தரமானதாக இருக்கட்டும். (ரி.வே. 2.18.8)

* தேவர்கள், தூய்மையானவர்களிடம் நெருங்கி, அவர்களது எண்ணங்களைப் பூர்த்தி செய்கிறார்கள். (ரி.வே. 8.18.15)

* இவ்வுலக இயக்கம் யாவும் இறைவனின் பிரதிபலிப்பாகும். (ரி.வே. 2.12.9)

* உலகில் உள்ள எல்லாப் பொருள்களிலும் கடவுள் பிரதிபலிக்கிறார். (ரி.வே. 6.47.18)

* நெருப்பு, தீமைகள் என்னும் புழுக்களை அழித்து விடுகிறது. (ரி.வே. 6.16.28)

* நெய், தீயினை வலுப்படுத்துவதால் அதனை நோக்கித் தாவுகிறது. நம்மை வலுப்படுத்திக் கொள்ள ஒருவர் உதவி தேவை. (ரி.வே. 2.3.11)

* என்றும் நிலைத்திருக்கும் இறைவன் மனித சமுதாயத்தின் மீது சுகத்தைப் பொழியட்டும். (ரி.வே. 1.90.30)

* தூய உள்ளத்தவர்கள் இறைவனோடு ஒன்றி விடுகிறார்கள். (ரி.வே. 3.1.13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சூரியன் நம்மிடம் உண்மையை பலப்படுத்தி, பொய்மையிலிருந்து காப்பாற்றட்டும். (ரி.வே. 1.152.3)

* தெளிவான நோக்குடைய பிரஹஸ்பதியே! நீங்கள் தான் எங்களுக்கு காப்பாளரும், வழிகாட்டியுமாக ஆவீர். (ரி.வே. 2.23.6)

* நமது முன்னோர்கள், நமக்குத் தகுந்த அறிவுரை வழங்கி நம்மைக் காப்பாற்றட்டும். (ரி.வே. 1.106.3)

* நல்ல மனிதருக்கு, மனம் மகிழ்ந்து வேலைக்காரனைப் போல் இறைவன் உதவி செய்கின்றார். (ரி.வே. 10.116.9)

* அதிகாலையில் நாம் எழுந்திருப்பதை கடவுள் விரும்புகிறார். (ரி.வே. 1.44.1)

* மனிதனது செயல்பாட்டை இறைவன் கண்காணித்து வருகிறார். (ரி.வே. 10.63.4)

* இல்லற தர்மத்தை, சிறப்பாக நடத்தும் மனிதன் மீது மகிழ்ச்சி கொண்டு, விடியல் கடவுளான உஷா அவனுக்கு அருளைப் பொழிகின்றார். (ரி.வே. 1.124.12)

* இறைவனின் அங்கமான இந்த பூமியில்' எங்களது வாழ்க்கை மங்களகரமானதாக அமையட்டும். (ரி.வே. 10.63.16)

* நல்ல பேச்சுக் கடவுளான இடாவும், அறிவுக் கடவுளாகிய சரஸ்வதியும், பூமியின் கடவுளாகிய மஹியும் மக்களுக்கு சுகத்தையே அளிக்கின்றனர். (ரி.வே. 5.5.8)

* உண்மையைப் புகழ்ந்து பாடப்படும் பாடல்களை செவிடர்களும் கேட்க முடியும். (ரி.வே. 4.23.8)

* சரஸ்வதி தேவியே! ஞானத்தைக் கொடுத்துதவி எங்களை முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லுங்கள். (ரி.வே. 6.61.4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உண்மை, அழிவற்ற செல்வத்தை அடைய உதவுகிறது.
(ரி.வே. 4.23.9)

* உண்மையின் மகத்துவம் உயர்ந்தது. மழைநீருக்கு உண்மை, நல்ல சுவையையும், அமிர்தத்துக்கு ஒப்பான தன்மையும் அளிக்கிறது.
(ரி.வே. 4.3.12)

* மனிதனின் தீயசெயல்களை இறைவன் நன்கு அறிவான்.
(ரி.வே. 7.60.5)

* உண்மையே நிறைந்த எனது பேச்சு, என்னை எந்த இடத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் காப்பாற்றட்டும். (ரி.வே. 10.37.2)

* இறையருளோடு, குறிப்பிட்ட இலக்கை அடைய விரும்புபவன் கட்டாயம் சென்று அடைவான். (ரி.வே. 8.79.5)

* நம்முடைய திறமை மிகுந்த தகுதியினாலேயே நாம் கடவுளின் கிருபையோடு வெற்றியடைகிறோம். (ரி.வே. 10.42.10)

* நிலத்தை உழுதபின்தான் ஒருவர் விளைச்சலை அறுக்க முடியும்.
(ரி.வே. 10.17.7)

* குறிக்கோள் உள்ளவர்கள்தான், வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். குறிக்கோள்தான் அவர்களின் பலத்திற்கு அடிப்படை.
(ரி.வே. 7.82.9)

* கடுமையான பாதையில் செல்ல, அறிவுள்ளவர்களுக்குத் தான் துணிவு உண்டு. (ரி.வே. 9.73.3)

* அயராது உழைப்பவரைத்தான் இறைவன் தனது நண்பனாக்கிக் கொள்கிறார். (ரி.வே. 4.33.11)

* திறமையற்றவர்களை இறைவன் ஆதரிப்பதில்லை.
(ரி.வே. 7.32.9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கடுமையாக உழைப்பவன் பல அரண்மனைகளுக்குச் சொந்தக்காரனாக ஆகிறான். (ரி.வே. 1.139.10)

* செல்வம் ஒருவரிடமே நீண்ட காலம் தங்குவதில்லை. (ரி.வே. 10.117.5)

* தர்மம் செய்யாதவர்களை கஷ்டம் தாக்குகிறது. (ரி.வே. 1.125.7)

* நல்ல செயல் புரிவோருக்கும், தானம் அளிப்பவர்களுக்கும் மட்டுமே உஷாதேவி செல்வத்தை வாரி வழங்குகிறார். (ரி.வே. 1.92.3)

* தானம் அளிப்பவரின் செல்வம், ஒரு போதும் குறைவதில்லை. (ரி.வே. 10.117.3)

* பசுக்களையும், ஆடைகளையும் தேவையானவர்களுக்கு தானம் செய்பவர்களின் இல்லத்தில், மகாலெட்சுமி வசிக்கின்றாள். (ரி.வே. 5.42.8)

* தானம் அளிப்பவர்கள் நீண்ட ஆயுளைப் பெறுகின்றனர். (ரி.வே. 1.125.6)

* தர்மம் செய்பவர்கள் அழியாத் தன்மை பெற்றுப் புகழடைகிறார்கள். (ரி.வே. 1.126.6)

* தேவையான காலத்தில் உதவாத நண்பன் நண்பனே அல்ல. (ரி.வே. 10.117.4)

* தான உள்ளம் படைத்த மனிதன், கருமியோடு நட்புக் கொள்ள மாட்டான். (ரி.வே.10.117.7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மகிழ்ச்சி நிறைந்த மனம் கொண்டவர்கள், வாழ்க்கைக் கடலில் அமைதியாக நீந்துவார்கள். (ரிக். 9.58.1)

* சரஸ்வதியே! தங்களிடமிருந்து வெளிப்படும் இனிமையான காற்று எங்கள் மீது பரவி எங்களைப் புனிதப்படுத்தட்டும். (ரிக். 7.96.5)

* ஒருவரைப் போல் இன்னொருவர் இருக்க மாட்டார். ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் தனித்தன்மை பெற்றவன். (ரிக். 10.117.9)

* இனிமையாகப் பேசுபவரிடம் நாமும் இனிமையாகப் பேசிப் பழக வேண்டும். (ரி.வே. 10.120.3)

* நம்மை நிந்தித்து ஒதுக்க நினைப்பவர்கள், எதிரிகட்கு ஒப்பானவர்கள். (ரி.வே. 2.41.8)

* சௌபாக்கிவதியான சரஸ்வதி, அனைவரிடமும் அன்பைப் பொழிகிறாள். (ரி.வே. 7.96.3)

* என்னுடைய நண்பர்களிடம் என்னுடைய நடத்தை ஏற்புடையதாக இருக்க வேண்டும். (ரி.வே. 10.10.1)*
மூர்க்கனிடம் உள்ள செல்வம் எவருக்கும் பயன்படாது.
(ரி.வே. 10.117.6)

* அறிஞர்கள் தங்களின் செயல்களை அவர்களது திறமையின் மூலம் தூய்மையாக்குகிறார்கள். (ரி.வே. 3.8.5)

* அதிகாலையில் எழுந்திருப்பவர்களுக்கு எல்லா நன்மைகளும் கிடைக்கும். (ரி.வே. 1.125.11)

* நம்மைப் பழிப்பவர் தம்மையே தாழ்த்திக் கொள்கிறார்.
(ரி.வே. 5.2.6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிறர் பொருளில் ஆசை வைக்க மாட்டேன்

பிறர் பொருளில் ஆசை வைக்கமாட்டேன். தேவைக்கு மட்டுமே திட்டமிட்டுப் பொருளை ஈட்டி, எவரிடமும் கையேந்தாமல் வள வாழ்வு வாழ்வேன். உண்மையே நம்பிக்கை. பொய் அவநம்பிக்கை. எனவே அனைவரும் நம்பிக்கை கொள்ளும் சத்தியத்தில் கலந்து வாழ்வேன். நம்பிக்கையே நமது வாழ்வு. நம்பிக்கையில்தான் நமது வாழ்வு அடங்கியுள்ளது. அது என்றும் வெற்றி பெறும். (ய.வே. 2.10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உயிர்களிடமும் ஒரே ஆன்மா வசிக்கிறது.

எல்லா உயிர்களிடமும் ஒரே ஆன்மா வசிப்பதைக் காண்பவனுக்கு (ஒன்றிடம்) ஆசையோ, (இன்னொன்றிடம்) துயரமோ ஏன் உண்டாகிறது.

(ய.வே. 40.7)

### அனைத்திலும் கடவுள் வியாபித்திருக்கிறார்

உலகில் எல்லாமே நிலைத்திருப்பவை. அவை அனைத்திலும் கடவுள் வியாபித்திருக்கிறார். அகில உலகிலும் பரந்திருக்கிறவர் அவர்.

(ய.வே. 40.1)

### பரமாத்மாவாகிய இறைவன்

### பிரபஞ்சத்தில் கலந்து பரவியிருக்கிறார்

பரமாத்மா பஞ்சபூதங்களிலும், (நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம்) எழுந்தருளியிருக்கிறார். எல்லாப் பிராணிகளின் அகத்திலும் கலந்திருக்கிறார். (ய.வே. 23.52)

### ஒரே பரமாத்மா பலவாக காட்சியளிக்கிறார்

பரமாத்மாவே அக்னியும், ஆதித்தனும், வாயுவும், சந்திரனும், சுக்கிரனும், ஜலமும், பிரஜாபதியும் ஆவார். அவர் எங்கும் எதிலும் உள்ளார்.

(ய.வே. 32,1)

### உயிர்களை துன்புறுத்தல் கூடாது

பசுக்களைக் காப்பாயாக. பசுவை அடிக்காதே. வெள்ளாட்டையோ, செம்மறி ஆட்டையே இம்சை செய்யாதே. இரு கால்கள் உள்ள மனிதர்களையும், பறவைகளையும் துன்புறுத்தாதே. குதிரை, கழுதை முதலிய பிராணிகளைக் கொல்லாதே. எந்த உயிருக்கும் இம்சை புரியாதே. (ய.வே. 13.47.48)

### எல்லா உயிர்களும் என் நண்பர்கள்

எல்லா உயிர்களும் என்னை நண்பனாகக் கருதட்டும். நானும் எல்லா உயிர்களையும் நண்பர்களாகக் கருதுவேனாக.

(ய.வே. 36,18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதில் சீரிய எண்ணங்கள் நிரம்பித் ததும்பட்டும்

மனம் எல்லா உயிர்களின் உள்ளங்களிலும் ஒளியைப் பரப்புகிறது. மனம் விழிப்புடன் இருக்கிறது. மனம் தைரியமாகவும் அழிவில்லாமலும் இருக்கிறது. மனம் அறிவைக் கொடுக்கிறது. மனமின்றி நம்மால் எதையும் செய்ய முடியாது. அப்படிப்பட்ட மனதில் சீரிய எண்ணங்கள் நிரம்பித் ததும்பட்டும். (ய.வே. 34.3)

## என் மனம் நல்ல எண்ணங்கள் பொருந்தியதாக இருந்து வரட்டும்.

மனம் – மாந்தரைச் செயலில் முனையச் செய்கிறது. மனதிற்கு முதுமை இல்லை. மனம் மிகவும் வேகமாக உள்ளது. மனம் இந்த உள்ளத்தில் நிலைத்திருக்கிறது. மனம் – மனிதர் முதலிய உயிர்களை, சாரதி குதிரைகளின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து ஓட்டிச் செல்வது போல், நடத்திச் செல்கிறது. அப்படிப்பட்ட என் மனம் நல்ல எண்ணங்கள் பொருந்தியதாய் இருந்து வரட்டும். (ய.வே. 34.6)

## இந்த உலகில் பயன்கருதாமல் செயலைச் செய்துகொண்டே நூறு ஆண்டுகள் வாழ விரும்ப வேண்டும்.

இவ்வுலகில் கர்மம் அல்லது செயல் புரிந்தவாறே, நூறு ஆண்டுகள் வாழ விரும்பு. பயன் கருதாமல் செயல் புரிகையில் செயலின் விளைவு நம்மைத் தீண்டாது, விடுதலை பெற இதுவே வழி. (ய.வே. 40.2)

## பசுவை துன்புறுத்தக் கூடாது

ஏ அக்னி தேவனே! இந்தப் பசு உயர்ந்த இடத்தில் இருப்பதாகும். இது ஆயிரம் வகையில் நமக்கு உதவுகிறது. ஆயிரம் கண்களால் பால் பொழிகிறது. மக்களுக்குப் பயன்படுகிற, நன்மை கொடுக்கக் கூடிய பாலையும் நெய்யையும் பசு அளிக்கிறது. அத்தியைப் போன்ற இந்தப் பசுவைத் துன்புறுத்தாதே. (ய.வே. 13.4)

ஏ, கிரகங்களே! நான் பெற்ற செல்வத்தைப் பாதுகாத்து உதவுங்கள். எங்கள் நன்மைக்காக உங்களை வேண்டிக்கொள்ள வந்திருக்கிறேன். எங்களைத் தீமைகள் அணுகாது இருக்க அருள் புரியுங்கள். எனக்கு எல்லாம் நல்லவைகளாக அமையட்டும். எனக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் கிடைக்கட்டும். (ய.வே.3.43)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விவசாயம் செய்யவும்

விவசாயம் செய். அதிலிருந்து கிடைப்பது குறைவாக இருப்பினும், அதையே மிகுதியாகக் கருது. (ய.வே. 38.11)

### பகிர்ந்து உண்ணுறு

கடவுள் உனக்கு அளித்துள்ளதில் பிறருக்குப் பகிர்ந்து அளித்தது போக மீதியுள்ளதை நீ உண்ணவும். (ய.40,1)

### நூறாண்டுகளுக்கு மேலும் வாழ்வோமாக

நாம் நூறு ஆண்டுகள் வரை பார்ப்போம். நூறு ஆண்டுகள்வரை காதால் கேட்போம். நூறு ஆண்டுகள் வரை பேசிக்கொண்டு இருப்போம். நூறு ஆண்டுகள் பஞ்சமின்றி செல்வத்தில் கொழிப்போம். நூறு ஆண்டுகளுக்கு மேலும் உயிர் வாழ்வோம்.

### என் உடல்பகுதிகளும் பொலிவோடு இருக்கட்டும்

எனது தலை, லட்சுமி கடாட்சம் பெற்றுப் பொலிவதாக. என் முகம் புகழோடு பொலியட்டும். என் கேசமும், தாடி, மீசையும் ஒளியோடு திகழட்டும். என்உயிர், சிறந்த அமுதம் போல் இருக்கட்டும். என் கண்கள் ஒளிமயமாக விளங்கட்டும். என் காதுகள் தனி அழகுடன் திகழட்டும்.

(ய.வே. 20.5)

### என் உள்ளம் செம்மையாய் இருக்கட்டும்

ஏ, தேவனே ! என் உள்ளம் செம்மையாய் இருக்க வேண்டி உன்னைத் துதிக்கின்றேன். மனம் தூய்மையாய் இருக்கவும், நான் வீடு பேறு பெறவும் உன் புகழ் பாடி வேண்டுகின்றேன். என் பக்தியில் சூரியன் மகிழ வேண்டும். நீ இந்த வேள்வியை ஏற்றுக் கொள்வாயாக.
(ய.வே. 37.18)

### எனது வாய் உண்மையையே பேசட்டும்.

என் மனதின் நல்ல ஆசைகள் நிறைவேறட்டும். நான் என் வாயினால் உண்மையையே பேசும் ஆற்றல் பெற வேண்டும். என் வீட்டைப் பசுக்கள் நிறைந்து அழகூட்டட்டும். உணவு தானியங்கள் என் நாவுக்கு மிகுந்த ருசி அளிப்பதாகுக. லட்சுமி தேவியும், புகழும் என்னைச் சார்ந்திருக்கட்டும். (ய.வே. 39.4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது வாய் உண்மையையே பேசட்டும்.

என் மனதின் நல்ல ஆசைகள் நிறைவேறட்டும். நான் என் வாயினால் உண்மையையே பேசும் ஆற்றல் பெற வேண்டும். என் வீட்டைப் பசுக்கள் நிறைந்து அழகூட்டட்டும். உணவு தானியங்கள் என் நாவுக்கு மிகுந்த ருசி அளிப்பதாகுக. லட்சுமி தேவியும், புகழும் என்னைச் சார்ந்திருக்கட்டும். (ய.வே. 39.4)

## உலகம் அமைதிமயமாகட்டும்

சுவர்க்கம், அந்தரிஷம், பூமி ஆகியவற்றில் அமைதி நிலவ வேண்டும். நீர், மூலிகைகள், செடி கொடிகள், தேவர்கள், பிரம்மம், ஈஸ்வரன் ஆகியோரும், உலகமும் அமைதியாய் இருப்பதாகுக. சாந்தி அளிக்கும் தெய்வம் எனக்கு சாந்தி அளிப்பதாக. (ய.வே. 36.17)

இறைவா! நாங்கள் செல்வம் பெற எங்களை நல்வழி நடத்துவாய். (ய.வே. 5.36)

விரதங்களின் அதிபதியாகிய பரமாத்மாவே, நான் நல்ல குணங்களை ஏற்றுக் கடைப்பிடிக்கின்றேன். (ய.வே. 1.5)

மனிதா! நீ வல்லமையுள்ளவன். (ய.வே. 4.21)

பிறருக்குத் துன்பம் தரும் சுயநலக்காரர்களும் துஷ்டர்களுமான மனிதர்களை ஒடுக்க வேண்டும். (ய.வே.2.29)

நாம் மனிதர்களாக இருப்பதால் தவறுகள் செய்து விடுகின்றோம். (ய.வே. 19.62)

தாய் போன்று நம்மைக் காக்கும் நீர் (ஜலம்) நம்மைத் தூய்மைப்படுத்தட்டும். (ய.வே. 4.2)

இந்த உருண்டையான பூமி விண்வெளியில் சூரியனைச் சுற்றுகின்றது. (ய.வே. 3.6)

நம்முடைய இந்த மதி (அறிவுத்திறன்) எல்லாவற்றுக்கும் மேலானது. (ய.வே. 13.58)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே – இந்த இல்லற வாழ்வில் – தைரியம், சொந்த சாமர்த்தியம் வேண்டும். (ய.வே. 22.19)

இங்கே, இந்த வீட்டில், இல்லற வாழ்வில் ஆனந்தம் உள்ளது. இங்கு இன்புற்றிருப்பீர். (ய.வே. 8.5)

இவ்வில்லற வாழ்வில் அழகு உள்ளது. இங்கு மகிழ்வுடன் இருப்பீர். (ய.வே. 22.19)

கடுமையாகப் பேசுவதை விட்டு விடுங்கள். (ய.வே. 5.8)

பெண்ணே! சோம்பலை விட்டு எழு. பெரும் செயல்திறன் உள்ளவளாகு. (ய.வே. 11.64)

இறைவா! என் இரு கரங்களிலும் செல்வம் நிறையச் செய்வாய். (ய.வே. 5.19)

பெரும் செல்வங்கள் பெற, பெரும் முயற்சி செய்க. (ய.வே. 11.12)

முனைப்பால் பலம் பெறுக. (ய.வே. 15.9)

உண்மை வழி செல். (ய.வே. 6.12)

இப்பிறவி உனக்கு, மகிழ்வுடன் இருக்கவே கிடைத்திருக்கின்றது. (ய.வே. 19.8)

இப்பிறவி உனக்கு உண்மையுடன் நல்ல விதமாகவே வாழவே உள்ளது. (ய.வே. 7.10)

இறைவனை உன் இதயக் கோவிலில் நிலைநாட்டு (இறைவனை எப்பொழுதும் நினை) (ய.வே. 2.13)

ஞானிகள் நம் அறிவைப் புனிதமாக்கட்டும். (ய.வே. 9.1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல வேண்டிய வழி அறிந்து அவ்வழி செல்க. (வேத ஞானம் பெற்று வாழ்வில் முன்னேறு) (ய.வே. 2.21)

இல்லற வாழ்வில் பிரச்னைகளால் பயப்படாதே. நடுங்காதே. (ய.வே. 3.41)

உன் உள்ளம் உயர்ந்து, மேல்நிலை பெற்றவாறு இருக்கட்டும். (ய.வே. 1.18)

முக்காலமும் ஒரே நிலையில் உள்ள பரமனை உபாசனை செய்வோம். (ய.வே. 3.60)

பிரகாசமயமான உலகில் அவனைக் கண்ணால் காண இயலாது. அப்பரமன் இயற்றினவற்றைக் கெடுக்காதே. இந்த பூமியில் நன்றாக இரு. வாழ்க்கையை நன்றாக நடத்து. (ய.வே. 5.3)

தகுதி – திறமையால் பணமும் பெருமையும் கிட்டும். (ய.வே. 19.30)

நீ எனக்குத் தா, நான் உனக்குத் தருகிறேன். (கொடுக்கல் வாங்கலில் ஒழுங்காக இருப்போம்.) (ய.வே. 3.50)

பகைமை உணர்வுகளை அழித்து விடு. (ய.வே. 1.28)

பரமாத்மாவுக்கு உருவம் இல்லை. அவனை அளக்க, எடைபோட, மாற்ற இயலாது. (ய.வே. 32.3)

மனைவி – நன்மைகள் நிறையச் செய்கின்றவள். (ய.வே. 19.94)

பூமியானது நல் அறிஞர் செயலாற்றுமிடம். (ய.வே. 1.25)

விவேகத்தை வளர்த்துக்கொள். உடல் வலிமையை வளர்த்துக் கொள். ஆயுளை வளரச் செய். (ய.வே. 5.27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருணனின், நியாயம் செய்வோனாகிய பரமாத்மாவின் பாசம் – நியாயம் எனப்படும் கயிறு – எல்லோரையும் கட்டுகிறது. (ய.வே. 8.3)

மங்கலமானவன், மிக மிக மங்கலமானவன், மங்கலமய பரமேசுவரனுக்கு வணக்கம். (ய.வே. 16.41)

பெண்ணே! நலன்கள் பெருக வேத மந்திர ஞானம் நல்ல விதமாகப் பெறுவாய். (ய.வே. 14.2)

நாம் – நல்லதும் கெட்டதும் நினைக்கிற மனத்தை எல்லாவிதமாகவும் அடக்கி உறுதியாக்குவோம். (இறைவனை அடைய, நலன் பெற) (ய.வே. 3.53)

என் மனம் மிக்க துணிவுடையது. (ய.வே. 20.6)

மாணவர்களே! உங்களுடைய சிறந்த ஆசிரியர்கள், உங்களுடைய சிறு கஷ்டங்களையும் நீக்குவார்களாக. (ய.வே. 23.41)

கர்வமடையாதே. (ய.வே. 13.41)

உத்தமகுணங்களை நிச்சயம் பெறுவேனாக. (ய.வே. 13.11)

நம்மில் ஒளியும் வல்லமையும் நிறையட்டும். (ய.வே. 8.35)

நல்ல உணவு முதலியவற்றால் சக்தியுள்ளவராவீர். (ய.வே. 9.6)

ஞானம் பரவச் செய்தும் மனத்தகத்தே, வேள்வி செய்தும் இறைவனை ஞானிகள் வழிபடுகின்றனர். (ய.வே. 31.16)

அறிவுடையோருக்கு, இல்லற வாழ்க்கை மிக்க சுகத்தை நிச்சயம் அளிக்கின்றது. (ய.வே. 8.4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களுடன் இணைந்து செயலாற்று. முயற்சிகள் செய்.
(ய.வே. 7.45)

நன்மைகள் செய்கின்றவனாக உலகில் விளங்கு. (ய.வே. 12.11)

எம்மில் ஞான ஜோதி – பரமாத்ம ஜோதி – நிறையட்டும்.
(ய.வே. 12.17)

இறைவனே, எம் துன்பங்கள் அனைத்தையும் நீக்குவாயாக.
(ய.வே. 30.3)

எல்லாம் வல்ல பரமாத்மா, இவ்வுலகங்கள் அனைத்திலும் நிறைந்துள்ளான். (ய.வே. 40.1)

இவ்வுலகப் பொருட்களை தியாக மனப்பான்மையுடன் அனுபவிப்பீர்.
(ய.வே. 40.1)

அறிஞர்கள் காட்டும் வழிகளில் செல்க. (ய.வே. 9.18)

அறிவும் துணிவும் உடையோர், தம் செயல்களின் சிறந்த பலன்களைப் பெறுகின்றனர். (ய.வே. 19.52)

நீ செய்த நன்மை தீமைகளை நினைத்துப் பார். (ய.வே. 40.15)

செல்வத்தாலும் அதனைப் பங்கிடுவதாலும் நாம் மிக்க மகிழ்ச்சி அடைவோம். (ய.வே. 7.7)

தெய்விகச் செல்வங்கள் நம் வாழ்வில் நமக்கு மகிழ்வூட்டுகின்றன.
(ய.வே. 3.21)

ஆசிரியரே! நல்லொழுக்கம், செல்வம், சிறப்பு எனும் பெருமை மிக்கனவற்றை உம்முடைய மாணவன் பெறுமாறு முன்னேறச் செய்வீர்.
(ய.வே. 27.8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்களை நல்ல விதமாக தானம் செய்யுங்கள். நிறைய தானம் செய்யுங்கள். (ய.வே. 19.62)

வல்லமை, விடாமுயற்சி உடையவராக இருப்பீர். (ய.வே. 9.9)

ஞானிகள் – பரமனுடைய மேலான நிலையை – திருவடியினை – எப்பொழுதும் கண்டவாறு உள்ளனர். (ய.வே. 6.5)

எல்லா வல்லமைகளும் உள்ளவனாதலின், பரமன் போற்றப்படுகின்றான். (ய.வே. 5.20)

ஞானிகளே! மக்களை விரத மேற்கச் செய்வீர். (விரதம் – இறைஞானமும் உலக ஞானமும் பெற்று நல்லொழுக்கத்துடன் வாழ்தல்) (ய.வே. 4.11)

பிரம்மசரியம் முதலான விரதம் கடைப்பிடிப்பதால், மனிதன் தகுதியும் திறமையும் பெறுகின்றான். (ய.வே. 19.30)

மனிதா! நீ ஞானமாக, ஞானம் பெறத் தகுதி உள்ளவன். (ய.வே. 2.2)

இவ்வுலகில் செயலாற்றியவாறு வாழ விரும்புவீர். (ய.வே. 40.2)

ஞான முயலைப் போல ஆனந்தமாகக் குதித்துப் பாய்கின்றான். (உற்சாகத்துடன் முன்னேறுகின்றான்) (ய.வே. 23.56)

'ஓம்' என இறைவனை நினை. (ய.வே. 40.15)

கருடனைப் போலப் பாய்ந்து துஷ்டர்களை அடக்கு. (ய.வே. 4.34)

சிரத்தையுடன் – ஈடுபட்டால் சத்ய சொரூபனாகிய பரமனை அடைய முடியும். (ய.வே. 19.30)

இறைவா! எனக்கு எல்லா உலக சுகங்களும் அருள்வாய். (ய.வே. 31.22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாறு கலைகளும் உள்ள பரமன் நமக்கு சுகம் அருளட்டும். (பதினாறு கலைகளாவன:) 1. பிராணன், 2. சிரத்தை, 3. பூமி 4. ஜலம், 5. அக்னி, 6. வாயு, 7. ஆகாயம், 8. இந்திரியங்கள் (புலன்கள்), 9. மனம், 10. அன்னம் (உணவு), 11. வீரியம் — வல்லமை, 12. தவம், 13. மந்திரம், 14. கருமம் (செயல்), 15. லோகம், 16. நாமம் — பெயர், புகழ். — (பிரஷ்ன உபனிஷத்).

அனேக விதமான புஷ்டி தரும் பொருள்களால் நான் உடல், மன வல்லமைகளை அதிகரிக்கச் செய்வேனாக. (ய.வே. 4.26)

சுயமாக வேள்வி செய். (அறிஞர்களுடன் சேர்ந்து நற்செயல்களில் ஈடுபடு) (ய.வே. 23.15)

சுயமாகப் பிறருடன் சேர்ந்து சேவை செய். (ய.வே. 23.15)

மண்ணையும் விண்ணையும் ஒன்றாக்கும் வேகத்துடன் சுயமாக விடாமுயற்சி செய்து முன்னேறு. (ய.வே. 17.22)

பரமனை உபாசனை செய்து, இம்மைக்கும் மறுமைக்குமான சுகங்கள் அனைத்தையும் பெறுக. (ய.வே. 18.1)

உன் குற்றம் குறைகளை நினைத்துப் பார். (ய.வே. 40.15)

மதுபானமே! நீ எனது உடல் — மனபலத்தைக் குறைக்கின்றாய். (ய.வே. 19.7)

நல்லவீரர்களே, நீங்கள் வீரர்களைத் தோற்றுவிப்பீர். (ய.வே. 7.13)

மனிதா, நீ இலட்சிய இல்லறத்தானாக இரு. (ய.வே. 8.8)

அன்பே மிக உயர்ந்த காணிக்கை — ஹவிப்பொருள். (ஹவி = வேள்வித்தீயில் இறைவனுக்குக் காணிக்கையாக இடப்படும் பொருள்.) (ய.வே. 19.2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையாளரான பெருமக்களிடையே நான் புகழுடன் இருப்பேனாக. (ய.வே. 8.38)

இறைவா! நான் என் கடமைகளைச் செய்கின்றேன். (ய.வே. 19.2)

பசுவைக் கொல்லுவோனுக்கு மரண தண்டனை (பால் தரும் பசு தாய்க்குச் சமம். அதனைக் கொல்லக்கூடாது) (ய.வே. 30.8)

நன்றாக இனிமையாகப் பேசும் அறிஞன், விரும்பியவற்றை அடைகின்றான். (ய.வே. 19.29)

என் தாயும் தந்தையும் என்னால் துன்பம் துயர் அடைய மாட்டார்கள். (அவர்கள் சுகமாக இருக்க ஆவன செய்வேன்). (ய.வே. 19.11)

அறிவுக்கு ஞானிகளையும், பாதுகாப்புக்கு அரசு அதிகாரிகளையும் நாடுவீர். (ய.வே. 30.5)

கால்நடைகள் செல்வம் முதலியவற்றுக்காக சிறந்த மனிதர்களையும் – வைசியர்களையும், மெய்வருந்தி உழைக்க அன்புடன் சேவை செய்து தூய்மைப்படுத்துவோராகிய உழைப்பாளிகளையும் நாடுவீர். (ய.வே. 30.5)

சாந்தமான மனிதனே, நீ பிரகாச சொரூபனான இறைவனை அடைய உத்தம ஞான விஷயங்களைக் கேட்டு அறிவாயாக. (ய.வே. 12.113)

மனிதரிடை நான் மிக்க பராக்கிரம சாலி ஆவேன். (ய.வே. 8.39)

மனிதரிடை, நான் கல்வி அறிவால் ஒளியுறுவேன். (ய.வே. 8.40)

பாவ–அதரும–அஞ்ஞான இருளைத் தூர ஒட்டு. (ய.வே. 8.44)

இறைவன் அருளால் நாம் எல்லா நலன்களும் பெறுவோமாக. (ய.வே. 22.22)

நாம் எல்லாவிதமாகவும் புகழ் பெறுவோம். (ய.வே. 19.44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையும் வனப்பும் பெற பசுக்களை வளர்ப்போம். (ய.வே. 30.11)

பசும்பால், பலமும் நீண்ட ஆயுளும் உண்டாக்கும். (ய.வே. 19.84)

இந்த உடல் உனக்கு நற்செயல் புரிய அளிக்கப்பட்டுள்ளது.
(ய.வே. 4.13)

பசுவைக் கொல்லாதே.
(ய.வே. 19.44)

அறிஞரை வணங்குவோம். பெற்றோருக்குச் சேவை செய்வோம்.
(ய.வே. 2.7)

தாய் நாட்டுக்கு வணக்கம். (ய.வே. 9.22)

நான் இனிமையாகப் பேசுகின்றவன். (ய.வே. 9.34.3)

உன் வாக்கு தூய்மையாக இருக்கட்டும். (ய.வே. 6.15)

இறைவன் அருளாலும், ஞானியர் துணையாலும் உன் வாக்கில் வல்லமை நிறையட்டும். (ய.வே. 18.29)

வாக்கின் தலைவனாகிய இறைவன், நம் வாக்கினை இனிதாக்கட்டும்.
(ய.வே. 30.1)

எவ்விடத்தும் நாம் வல்லவராகி வெற்றி கொள்வோம்.
(ய.வே. 18.33)

இறைவா! உண்மை, பொய்யினைப் பிரித்து அறியும் நல் அறிவை எனக்குத் தந்து அருள்வாய். (ய.வே. 32.13)

என்னுடன் சேர்ந்தவர்களை நான் உயர்த்துகின்றேன்.
(ய.வே. 11.82)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிகளால் நாம் நல்லதையே கேட்போம். (ய.வே. 25.21)

துஷ்டர்களை தூர விலக்கி வைப்பீர். (ய.வே. 19.38)

என் மனம் நல்லெண்ணம் நிறைந்ததாக இருக்கட்டும்.
(ய.வே. 34.40)

சுதந்திரமாக நூறு ஆண்டுகள் வாழ்வோமாக. (ய.வே. 36.24)

வாழ்வினை நிறைவு செய், குறைகளை நிறைவு செய்.
(ய.வே. 12.54)

என் இருகைகளிலும் செயல் திறம் உண்டு. (ய.வே. 20.6)

உன்னுடைய புயங்கள் உறுதியுடன் இருக்கட்டும். (ய.வே. 17.46)

எனது உடல் பாறை போல் உறுதிபெறட்டும். (ய.வே. 29.49)

உண்மை – ஒழுங்கு – கட்டுப்பாடுகளின் வழி செல். (ய.வே. 7.45)

எல்லோரையும் நட்புக் கண்களால் காண்போம். (ய.வே. 36.18)

பொய்யை விட்டு, நான் உண்மையை ஏற்கிறேன். (ய.வே. 1.5)

பரம் பொருள் ஒன்றே. அதனை அறிஞர் பலவாறாகக் கூறுகின்றனர்.
(ரு.வே. 1.164.46)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இந்தத் தெய்வ வழிபாடு அகில உலகத்திற்கும் பயனுள்ளதாக அமையட்டும்.

* ஓ அக்னியே! வாழ்க்கைக்குத் தேவையான அத்துணை செல்வங்களையும் பெற்று, நாங்கள் நலத்துடன் மகிழ்ச்சி பெறுவோமாக.

* அறிவுள்ள மக்கள், சூரியனும் நீரும் இணைந்து நன்மை தரும் இவ்வுலகில், தியானம் செய்து மகிழ்ச்சியடைகிறார்கள்.

* ஐம்புலன்கள் என்ற நதிகள் தங்களது கிளைகளுடன் 'ஞானம்' என்ற சரஸ்வதியிடம் சேர்ந்து விடுகின்றன.

* இந்த உடலாகிய குதிரை, அறிவு, உயிர், சக்தி ஆகியவற்றைச் சுமந்து செல்கின்றது.

* காலம் என்பது ஒளிமயமாகப் பிரகாசிக்கும் இறைவனிடமிருந்து வெளிப்பட்டதாகும்.

* 'ஞானி' என்பவன், எல்லா உயிர்களிடத்திலும் இறைவனைக் காண்கின்றான். அதனால்தான் அவன் தெளிவான மனத்துடன் விளங்குகின்றான்.

* தெய்வ வழிபாடு மற்றும் தியானம் செய்பவன், மனித இனத்தில் பெருமைமிக்கவனாய் பிரகாசிக்கிறான்.

* நட்புள்ளத்தோடு வணங்கும் மக்களை இறைவன் பாதுகாக்கிறார்.

* இந்த அகில உலகத்தையும் தாங்குகிறவர் இறைவன் தான்.

* உனது கண்களும் முகமும் எல்லாத் திசைகளையும் பரந்த உள்ளத்தோடு, பாகுபாடின்றி எதையும் நோக்கட்டும்.

* எண்ணற்ற பெயர்களைக் கொண்டிருந்தாலும் இறைவன் ஒருவனே.

* இறைவா! எங்களது தீய பாவங்களைப் போக்குவீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இறைவனது கருணை தான் மோட்சம். அவனது கருணையின்மை தான் மரணம்.

* இறைவனை வழிபடுபவர்களுக்கு அவர், உடல் பலத்தையும் மனோ பலத்தையும் அளிக்கிறார்.

* பரம் பொருளை முழுமையாக உணர்ந்தவனுக்கு, உலகிலுள்ள எல்லா உயிரினங்களும் நண்பர்களே.

* மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பெறுவதற்கு, பரம் பொருளை உணர்ந்து, அவரை வணங்குவது தான் ஒரே வழி.

* இறைவா! உன்னைப் புகழ்ந்து வணங்கி, 'எங்களுக்கு வலிமை தர வேண்டும்' என வேண்டுகிறோம்.

* ஞானிகள், தீயவர்களின் பழிச்சொல்லைப் பொருட்படுத்துவது இல்லை.

* கடவுள் எல்லா உயிரினங்களிலும் கலந்திருக்கிறார். வெளியிலும் பரவியுள்ளார்.

* எல்லாம் ஒன்றே தான் என்று உணர்ந்த பிறகு, உலகத்தில் எவ்வித குழப்பமுமில்லை, துன்பமும் இல்லை.

* இவ்வுலகில் மக்கள் நோயின்றி மனமகிழ்ச்சியோடு வாழட்டும்.

* வேத வார்த்தை மங்களகரமானது. இறைவனால் இது மக்களுக்கு உரைக்கப்பட்டுள்ளது.

* இந்தக் குடும்பத் தலைவனுக்குப் பிறக்கும்மகன், நல்ல பண்புள்ளவனாகவும், வீரனாகவும் இருக்கட்டுமே!

* இவ்வுலகில் வளமான மரம், செடி, கொடிகள் இனிமை நிறைந்த பழங்களைக் கொடுக்கட்டும்.

* எங்கள் பக்திக்கு இசைந்து மேகம் மழை பொழியட்டும்.

* அன்னம் அளிக்கும் இறைவா! நீ கொடுக்கும் உணவு எங்கள் உடல் நோயைப் போக்கி, உடலுக்கு பலத்தைக் கொடுக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எனக்கு விவசாயத்தின் மூலமாகவும், மழையின் மூலமாகவும் நல்ல உணவு கிடைக்கட்டும்.

* ஓ விவசாயிகளே! கலப்பையைக் கட்டி, நுகத்தடியைப் பூட்டி உழவுத் தொழிலைச் செய்யுங்கள்.

* தூய மனைவியே! நெய், பால் முதலியவற்றோடு செழித்து மக்களைப் பெற்று மகிழ்ச்சியடைவாயாக.

* அன்பான மனைவியே! அமைதியாக இருந்து குடும்பத்தைப் பாதுகாப்பாயாக.

* ஓ அக்னியே! குடும்பத்தில் தம்பதிகள் இருவரும் நல்லொழுக்கம் மற்றும் அன்பு கொண்டவராய் விளங்கட்டும்.

* நமது தாம்பத்திய வாழ்க்கை, எந்த விதத் தடங்கலும் இல்லாமல் நூறு ஆண்டுகள் தொடரட்டும்.

* ஒருவரது விருப்பத்திற்கு மற்றவர் இசைந்து விட்டுக் கொடுத்து வாழும் தம்பதிகளின் வாழ்க்கை வளமானதாக அமைகிறது.

* நாம் எய்தும் அம்பு, வெற்றிகளைக் குவிக்கட்டும். நமது வீரர்கள் வெற்றிவாகை சூடட்டும்.

* நமக்கு எந்த இடத்தில் அவமானம் நிகழ்கிறதோ, அந்த இடத்தில் நமது 'அச்சமின்மை' தொடங்கி வெற்றி பெறத் துடிக்கிறது.

* நமது கண்கள் எல்லோரையும் நட்புணர்வோடு பார்க்கட்டும்.

* எல்லா மனிதர்களின் கண்களும் என்னை நட்புணர்வோடு பார்க்கட்டும்.

* ஏ இறைவனே! எங்களுக்கு அறிவு நிறைந்த நண்பர்களையும், வளமான செல்வத்தையும் கொடுப்பாயாக.

* என்னிடம் புகழும் செல்வமும் நிலைத்து நிற்கட்டும்.

* இறைவா! நாங்கள் நல்லறிவைப் பயன்படுத்தி, எங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள அருள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இவ்வுலகில் மனித இனத்திற்கும், மற்ற உயிரினங்களுக்கும் சுபம் உண்டாகட்டும்.

* இந்த உலகில் நல்ல செய்திகளைப் பரப்புவதற்காகவே கடவுள் மனிதனைப் படைத்திருக்கிறார்.

* மனம் நோகும்படி பேசுபவரை இறைவனே வெறுக்கிறார்.

* நாங்கள் அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்களை சூரிய பகவான் விலக்குவாராக.

* என்னுடைய துன்பங்களையும் பாவங்களையும் அக்னி தேவன் போக்குவாராக.

* பசு வதை செய்யாதே. பசு, எங்கும் பரவியிருக்கும் அதிதி தேவதை என்னும் கடவுளுக்கு ஒப்பானது.

* பால், நெய் ஆகியவற்றைத் தந்து உதவும் பசுவைத் துன்புறுத்தாதே.

* உன்னுடைய விடாமுயற்சியின் மூலமாக உண்மையே வடிவான பரம்பொருளாகிய பிரம்மத்தை அடையலாம்.

* உண்மையையே பேசுவோருக்கு எல்லாச் செல்வங்களும் கிடைப்பது உறுதி.

* ஓ அக்னியே! உன்னை வணங்கிக் கொண்டிருக்கும் மக்களை துன்பம் நெருங்காமலிருக்கட்டும்.

* தெய்வ வழிபாட்டின் மூலம் கண் பார்வை மிளிரட்டும்.

* ஓ அக்னியே! விழிப்புடனும் ஜாக்கிரதையாகவும் இருக்கும் நீ, எங்களையும் அப்படியே இருக்கச் செய்வாயாக.

* ஜோதி வடிவான இறைவா! நீ எங்களுக்கு எப்போதும் நன்மை கொடுப்பவனாகவே இரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாமவேதக் கருத்துக்களில் சில...

### 1. பிறந்த பச்சிளங்குழந்தை தூய்மையானது

இந்த மண்ணில் பிறக்கும்போது எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் என்ற அற்புத விளக்கம் இது.

### 2. அறிவு தூய்மையானது.

நல்வாழ்விற்கு மனிதனுக்கு மட்டும் இறைவன் அளித்த ஆறாவது அறிவு எனப்படும் சிந்திக்கும் அறிவு, இறைவன் அளித்த வரப்பிரசாதம். அதனைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டியது மனிதனுடைய கடமை என்ற உயர்ந்த கருத்து அருமையாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

### 3. கவிதை தூய்மை நிறைந்தது.

மனிதனுக்கு கவிதை இயற்றுவது, கவிதை பாடுவது போன்ற கலைத்திறமை வேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்றது.

### 4. பசு பவித்திரமானது

பசுவை தெய்வமாக நினைத்து வழிபடும் பண்பாடு, இந்து கலாச்சாரத்தில் மட்டுமே உண்டு என்பதை இந்த வேதம் தெளிவாக விளக்குகின்றது.

### 5. சமுதாயத்தில் நன்னடத்தையுடன்

### வாழ்கின்றவர்கள் தூயவர்கள்.

நன்னடத்தைக்கு வேதம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றது என்பதை உணர்த்தும் உயர்ந்த கருத்து இது.

### 6. நாட்டுக்காகத் தியாகம் செய்யும் வீரன் தூயவன்

நாட்டைக்காக்கும் தியாகிகளுக்கு மக்கள் இன்றைக்கும் எவ்வளவு மரியாதை செய்கிறார்கள், என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இதை அன்றைக்கே வேதம் அற்புதமாக எடுத்துச் சொல்லியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7. பலருக்கு நலம் விளைவிக்கும் செல்வம் தாரயது.

ஒருவன் எவ்வளவு தான் செல்வம் வைத்திருந்தாலும், மக்களின் நன்மைக்காக அந்தச் செல்வம் பயன்பட்டால்தான் அதற்கு மரியாதை என்பதை, வேதம் எவ்வளவு தெளிவாக விளக்குகிறது என்பது இதன் மூலம் புரிகின்றது.

### 8. செயல்திறமை தாரயது

ஒருவன் எவ்வளவு தான் நல்லவனாக இருந்தாலும், அவன் செயல்திறன் மிக்க வல்லவனாக இருந்தால் தான் அவனது வாழ்க்கை அவனுக்கும், சமுதாயத்திற்கும் உபயோகமானதாக இருக்கும். அவனால் வீடும், நாடும் வளம் பெறும் என்ற உயர்ந்த கருத்தை வேதம் விளக்குகிறது.

### 9. குடும்பத்தைக் காக்கும் தலைவன் தாரயவன்

குடும்பத்தின் வளமும், நலமும் குடும்பத் தலைவனின் கையில்தான் அடங்கியுள்ளது என்பதை இதன் மூலம் நன்கு உணர முடிகிறது.

### 10. ஆனந்தம் தாரயது

எத்தனை செல்வம் இருந்தாலும், தனி மனித வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் மகிழ்ச்சியே முக்கியமானது என்பதை வேதகாலத்திலேயே விளக்கப்பட்டுள்ளது.

### 11. துயரத்தை நீக்கும் நண்பன் தாரயவன்

சோதனைகளும் வேதனைகளும் மிகுந்து நாம் துயரத்தில் மூழ்கியிருக்கும் போது, உதவிக்கரம் நீட்டுபவர் தான் உண்மை நண்பன் என்பதை அன்றே கூறியுள்ளது வேதம்.

13. நல்ல நண்பர்களின் உதவியுடன் எதிரிகளை வெற்றி கொள்வது மிக எளிது. (சாம.வே. 1590)

14. முயற்சியுடையவர்கள் மட்டுமே தாங்கள் நினைத்ததை அடைந்து வாழ்வில் முழு வெற்றி பெற முடியும். (சாம.வே. 435)

15. குறிக்கோள் இல்லாதவன் எந்த முயற்சியையும் எடுக்க மாட்டான். எதையும் சாதிக்க மாட்டான். (சாம.வே. 441)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1. தர்மத்தில் சத்தியத்திற்கு முதல் இடம்

பூமியை சத்தியம், நியமம், தீக்ஷை, தவம், பிரம்மம், வேள்வி ஆகியவை அரவணைத்துக் கொண்டிருக்கின்றன. சத்தியத்திற்கே இதில் முதல் இடம். (அ.வே.12.1.1)

### 2. என்னை எல்லோரும் விரும்பட்டும்

ஏ பூமியே! நீ எங்களை எல்லோருக்கும் நண்பர்களாக ஆக்கு. எல்லோரும் பொன்னை விரும்புவது போல, எங்களையும் அவர்கள் விரும்பட்டும். யாரும் எம்மை வெறுக்காது இருப்பார்களாக. (அ.12.1.18)

### 3. தெய்வம் என்னை விரும்ப வேண்டும்

ஏ அக்னி தேவனே! என்னை தெய்வங்களுக்கு வேண்டியவனாக ஆக்கு. அரசர்கள் என்னை விரும்ப வேண்டும். உழைப்பாளிகள் என்னை நேசிக்க வேண்டும். பார்ப்பவர்கள் எல்லோரும் என்னை நண்பனாகக் கருதட்டும். (அ.வே.19.62.1)

### 4. நான் யாரிடமும் பகைமை பாராட்டாமல் இருக்க வேண்டும்

ஏ பகவானே! என்னிடம் எவரேனும் விரோதம் பாராட்டினாலும், நான் யாருடனும் விரோதம் கொண்டாலும் 'அந்த விரோத மனப்பான்மையை ஒழித்து விடு. எவரும் என்னைப் பகைக்காமலும்' நான் எவரிடமும் பகைமை பாராட்டாமலும் இருக்கச் செய்வாயாக. (அ.வே.3.27.1.)

### 5. சண்டையும் பூசலும் வேண்டாம்

தமக்குள் சண்டையும், பூசலும் செய்யும் மாந்தரே! உங்களுக்குள் நிலவும் விரோதத்தையும், துவேஷத்தையும் நீங்கள் அன்பினால் கழுவி, அகற்றி விடுங்கள். நீங்கள், ஒருவர் மற்றவரிடம் தாய்ப் பசுவும் கன்றும் போலஅன்பு கொண்டாடி வாழுங்கள்.
(அ.வே.3.30.1.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. மாறுபட்ட கருத்துக்கள் நிலவ வேண்டாம்

எல்லோரும் ஒரேகருத் துடையவர்களாக இருப்பீர்களாக. இதுவரை மாறுபட்ட கருத்துக்கள் கொண்டிருந்தாலும், அந்நிலை மாறி, ஒத்த கருத்துடையவர்களாக ஆகி விடுங்கள். ஏ பரமாத்வே! 'நம்மவர், அன்னியர்' என்ற இருசாராரின் மனப்போக்குகளும் ஒன்று போல் இருக்கட்டும்! நாங்கள் எங்கள் மனப்பான்மையை பிறர்மனப்பான்மையோடுஒத்துபோய்,'எல்லோரும்சேர்ந்துநற்பணிகள் புரிவோம். (அ.வே.7,52,122)

## 7. பிரம்மச்சரியத்தின் பெருமை

வேதம் பிரம்மம் எனப்படுகிறது. வேதம் ஓதுவதற்காக ஏற்றுக் கொள்ளப்படும் நடைமுறைகள் பிரம்மச்சரியங்கள் எனப்படுவன. பிரம்மச்சரியம் என்ற தவம் இயற்றி, அரசன் தன் நாட்டிற்குத் தெம்பு ஊட்டுகிறான். ஆசிரியரும் பிரம்மச்சரியத்தின் மூலமாகவே பிரம்மச்சாரியை சீடனாக ஏற்றுக் கொள்கிறார். (அ.வே.11.5.17)

## 8. பிரம்மச்சரியமும் பிரம்மமும்

பிரம்மச்சரியமும் இறைவனாகிய பிரம்மமும் ஒன்றோடு ஒன்று இணைந்தது. அந்த அளவுக்கு பிரம்மச்சாரியின் மகிமை பெருமை பெற்றது. அக்னி முதலிய தெய்வங்களும் பிரம்மச்சாரியை நட்போடு வைத்துக் கொண்டார்கள். (அ.வே.11.5.5)

## 9. பிரம்மச்சரியம் சாவை வெல்லும் ஆற்றலை ஒத்தது

அக்னி முதலிய தெய்வங்கள் பிரம்மச்சரியத்தைப் போற்றியே, சாவை வெல்லும் ஆற்றலைப் பெற்றார்கள். (அ.வே.11.5.19)

## 10. பூமி நமது தாய்

பூமி நமது தாய். நாம் பூமியின் பிள்ளைகள். பூமித்தாய் நம்மைப் புனிதராக்கி தெம்பு ஊட்டுகிறாள். (அ.வே.12.1.12)

## 11. பூமி எம்மை வாழ்விப்பதாக

கடல்களும், ஏரி குளங்களும் நிறைந்துள்ள பூமியில் விவசாயம் நடந்து தானியங்கள் விளைகின்றன. இந்த உலகம் பூமியினால் திருப்தி அடைகிறது. அந்தபூமியிலே, கனிகளும்,தானியங்களும்மிகுதியாக விளையும் பகுதியில் என்னை இருத்திவாழவைக்கவேண்டும். (அ.வே.12.1.3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஏ பூமி எனக்கு உதவட்டும்

தானியத்தையும், பாலும், இன்பமும், அமைதியும் அளிக்கின்ற பூமியானது, எனக்கு உதவியாய் இருக்கட்டும்.

(அ.வே.12.1.59)

12. பூமிதான் எல்லா உயிர்களுக்கும் ஆதரவு

பூமி நான்கு திசைகளிலும் பரந்து இருக்கிறது. விவசாயம் நடந்து தானியங்கள் விளைவதால் பூமி எல்லா உயிர்களுக்கும் ஆதரவாய் இருக்கிறது. அந்த பூமி – எங்களுக்கு கால்நடைகளையும், உணவுத் தானியங்களையும் மிகுதியாக வழங்க வேண்டும். (அ.வே.12.1.4)

13. பருவங்களும் காலங்களும் நன்மை தருபவை

ஏ பூமி தேவியே! கார், குளிர், முன்பனி, இளவேனில், முதுவேனில் என்ற ஆறு பருவங்களும், பகல், இரவு, வாரம், திங்கள் ஆண்டு ஆகிய எல்லாமே நன்மைகளைத் தரட்டும். (அ.வே.12.1.36)

14. மாந்தர் அனைவரும் பூமியின் பிள்ளைகள்

ஏ, பூமாதேவியே! எல்லா உயிர்களும் உன் மடியில் தான் வளைய வருகின்றன. நீ பாதுகாக்கும் பிராணிகளுக்கும், மாந்தர்களுக்கும் சூரியன் உதவுகிறான். ஏ, பூமாதேவியே! எல்லா மாந்தரும் உன் பிள்ளைகளே! (அ.வே.12.1.15)

15. பூமி பசுவைப்போல் மக்களைக் காக்கின்றது

எத்தனையோ கலாச்சாரங்களைக் கடைப்பிடித்து, பல்வேறு மொழிகளைப் பேசும் மாந்தர்களைக் காத்து நிற்கும் பூமாதேவி, பசு கன்றினைக் காப்பது போல், எங்களைக் காக்கட்டும். (அ.வே.12.1.45)

16. புண்ணியங்களைத் தேடிச் சேர்க்கவும்

நான் தேடிச் சேர்க்கும் புண்ணியங்கள், என் வீட்டை வளமாக்கட்டும். புண்ணியங்களை சேகரித்ததின் மூலமாகவே, பாவங்கள் என்னை வந்து அடையாமல் விலகி விட்டன. (அ.வே.7.1134)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 17. பொருள் ஈட்டி தர்மம் செய்யவும்

நூறு கைகளினால் பொருளைச் சேர்த்து, ஆயிரங்கைகளினால் பிறருக்கு தர்மம் செய்யவும். (அ.வே.3.24.5)

### 18. சகோதரர்கள் பகையின்றி வாழவேண்டும்

அண்ணன் தம்பிகள் பகையின்றி வாழட்டும். அண்ணன் தங்கைகள் இவ்வாறே பகைமையில்லாமல் வாழ வேண்டும். எல்லாச் சகோதரர்களும் ஒரே வகையில் உழைத்துப் பாடுபடட்டும். அனைவரது மனப்பான்மையும் ஒன்று போல் அமையட்டும். எல்லோரும் இனிமையான குளிர்ச்சியான வார்த்தைகளையே பேசட்டும். (அ.வே.3.30.3)

### 19. குடும்பத்தின் ஒற்றுமை ஓங்கட்டும்

மகன் தந்தையின் விருப்பப்படி நடக்கட்டும். தாயும் மகனின் மனமொத்து இருந்து வரட்டும். மனைவி கணவனிடம் இனிமையாகவே பேசட்டும்.

(அ.வே.3.30.2)

### 20. ஒரு மனதாக காரியத்தைச் செய்யவும்

நீங்கள் ஒரே வகையான மனமுள்ளவர்களாக வாழுங்கள். ஒன்று போல் காரியத்தைச் செய்யுங்கள். ஒருவர் மற்றொருவரிடம் இனிமையாகப் பேசிப் பழகுங்கள். ஏ மாந்தர்களே! நான் உங்களை ஒரே வகையான காரியத்தைச் செய்ய ஈடுபடுத்துகிறேன். (அ.வே.3.30.5)

### 21. என் உடல் சக்தியோடு இயங்கட்டும்

என் நாக்கு வாழ்நாள் முழுதும் பேசும் சக்தியோடு இயங்கட்டும். எனது நாசிகளில் பிராணன் ஓடிக் கொண்டு இருக்கட்டும். என் கண்கள் பார்க்கும் சக்தியோடு விளங்கட்டும். எனது பற்கள் உறுதியாய் இருக்கட்டும். எனது கேசம் நரையன்றி இருக்கட்டும். எனது புஜங்களில் பலம் தொடரட்டும். என் நெஞ்சில் பலம் பெருகட்டும். தொடைகளில் சக்தி இருக்கட்டும். கால்கள் தள்ளாடாமல் நிற்கும் சக்தியோடு இருக்கட்டும். இம்சிக்கும் சிந்தனை இல்லாமல் ஆன்மா இருக்கட்டும். எல்லா அங்கங்களும் பாவங்கள் இன்றி உறுதியோடு விளங்கட்டும்.

(அ.வே.19.60.12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஞானிகளின் நல் உபதேசம் பெறுவோம். (அ. 6.47.2)

முப்பெரும் தேவியர் நமக்குப் பெரும் சுகம் அருள்வர். (முப்பெரும் தேவியர்: 1. தாய்நாடு 2. தாய்மொழி 3. தாய்நாட்டுப் பண்பாடு) (அ. 5.3.7)

மக்கள் தந்தைக்கு அனுகூலமாகவும், அன்னையின் மனம் மகிழும்படியும் நடக்க வேண்டும். (அ. 3.30.3)

நாடும் உயர்க, செல்வமும் பெருக. (அ. 13.1.34)


நல்ல வாக்கையே சொல். (அ. 3.30.3)

காலையும் மாலையும் (எப்பொழுதும்) மன மகிழ்ச்சியுடன் இரு. (அ. 3.30.7)

உலகின் ஆதாரம் சத்தியமே. (அ. 14.1.1)

புகழுடன் நிமிர்ந்து உயர்ந்து நில். (அ. 4.12.6)

உலகில் எல்லாப் பிராணிகளும், மனிதர்களும் நலமாக இருக்கட்டும். (அ. 1.31.4)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org